செவ்வாய் | ஆகஸ்ட் 1 | 📖 மாலை வாசகம் – எரேமியா 32:19

# சிதறாத வாழ்வை தேடுங்கள்

இரவு ஆகாரம் முடிந்ததும், கணவனானவன், தன் மனைவியை நோக்கி: இன்று சந்தையிலே வாங்கி வந்த வாழைப்பழைத்தை பிள்ளைக்கும் கொடுத்து, நீயும் சாப்பிடு என்று கூறினான். ஆனால், மனைவியானவளோ, பிள்ளைகுரியதை கொடுத்துவிட்டு, தன்னுடைய பங்கை, சாப்பிடாமல் வைத்திருந்தாள். கணவனானவன் மனைவியை நோக்கி: ஏன், அதை சாப்பிடாமல் வைத்திருக்கின்றாய் என்று கேட்டார். அதற்கு அவள்: நாளை காலை ஆகாரத்திற்கு பிள்ளைக்கு கொடுக்கலாம் என்று கூறினாள். பாருங்கள், பெற்றோர் தங்கள் பெலதின்படி பிள்ளைகளுக்கு சேர்த்து வைக்கின்றார்கள். சிலர் நாளைய தேவைக்கும், வேறுசிலர், அடுத்த மாதத்திற்குரிய கணித வகுப்பு கட்டணத்திற்கும், இன்னும் சிலர், அடுத்த ஆண்டிற்கான கல்லூரி செலவிற்கும் சேர்த்து வைக்கின்றார்கள். அதுமட்டு மல்ல, பல ஆண்டுகளுக்கு பின்நடக்க இருக்கும் திருமண செலவிற்கும், கண்காணாத அடுத்த சந்ததிக்கு தேவையானவைகளையும் சேர்த்து வைக்கின்றார்கள். நிலையில்லாத இந்த உலகிலே, நிலையற்ற வாழ்க்கை வாழும் மனிதர்கள், இந்த பூமியிலே வாழும் நாட்களிலே தங்கள் பிள்ளைகளுக்கு சிறப்பானவைகளை கொடுக்க விரும்புகின்றார்கள். உயர்ந்தவன். தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடில்லாமல், பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்து கரிசனையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அது பெற்றோருக்குரிய நல்ல சுபாவம். ஆனால் நாளைய நிலையை குறித்து நிச்சயம் யாருக்கு உண்டு? காலங்களை அறிந்தவர்கள் யார்? மனிதனுடைய யோசனைகள் எவ்வளவு சிறப்பாக இருந்தாலும் அவை யாவும் அழிந்து போய்விடும். எனவே, மிகவும் சிறப்பானவைகளை தங்கள் பிள்ளைகளுக்கும், தங்களுக்கு பின்வரும் சந்ததியினருக்கும் சேர்த்து வைக்க விரும்புகின்றவர்கள், முதலாவதாக, காலத்தை அறிந்த நேற்றும் இன்றும் என்றும் மாறாத இயேசுவினிடத்தில் சேரவேண்டும். பின்பு, தங்கள் பிள்ளைகளையும் அவரோடு சேர்க்க வேண்டும். இந்த பூமியிலே பிள்ளைகளுடைய சமாதானமான வாழ்விற்கும், பரலோகிலே நித்திய ஜீவனை அடைவதற்குமுரிய வழி ஆண்டவராகிய இயேசு ஒருவரே. நிலையான, நிம்மதியான வாழ்க்கை பிள்ளைகளுக்கு கொடுக்க விரும்பினால், ஆண்டவர் இயேசுவோடு அவர்களை சேர்த்துக் கொள்ளுங்கள். அவரோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.

**மத்தேயு 12:30**

**ஆண்டவர் இயேசு சொன்னார்: என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.**

**ஜெபம்**: அசையாததும் மாசற்றதும் அழியாததுமான வாழ்விற்கு என்னை அழைத்த தேவனே, இந்த மேன்மையை நான் உணர்ந்து ஆண்டவர் இயேசுவோடு சேர்ந்து வாழ என்னை உணர்வுள்ளவனாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேசங்களின் ஆளுகை

பண்டைய உலகிலே, எகிப்து ராஜ்யத்தை ஆட்சி செய்த பார்வோன் என்று அழைக்கப்பட்ட ராஜா இந்தப் பூமியிலே வல்லமைமிக்க படை களையுடையவனும், மனகடினமுள்ள ராஜா என்றும் கருதப்பட்டான். பார்வோன் ராஜா, தேவனுடைய ஜன ங்கள் ஏராளமானவர்களும், பலத்தவ ர்களுமாய் இருக்கிறார்கள். அவர்கள் பெருகாதபடிக்கும், ஒரு யுத்தம் உண் டானால், அவர்களும் நம்முடைய பகைஞரோடே கூடி, நமக்கு விரோத மாக யுத்தம்பண்ணி, தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகாதபடிக்கும், அவன் அவர்களைக்குறித்து ஒரு உபாயம் பண்ணினான். தேவனுடைய ஜன ங்களை அடிமைகளாக்கி, அவர்கள் மேல் ஆளோட்டிகளை வைத்து, அவர்களை வெகுவாய் ஒடுக்கி, கொடுமையாய் வேலை வாங்கினான். அதுமட்டுமல்லாமல், தேவ ஜனங்களிடத்திலே பிறக்கும் ஆண் குழந் தைகளை கொன்று போடும்படி கட்டளை கொடுத்திருந்தான். இப்படி யாக உபத்திரங்களுக்கு மேல் உபத்திரவங்கள். பூமியிலே பெரிய ராஜ்யம். வல்லமைமிக்க ராஜா. யார் உதவி செய்ய முடியும்? தேவ ஜனங்களோ, தங்கள் அடிமைத்தனத்தின் நிலைமையை உணர்ந்து, தேவனை நோக்கி பார்த்தார்கள். அவரிடத்திலே வேண்டுதல் செய் தார்கள். தேவனாகிய கர்த்தர் பார்வோனின் மனக்கடினத்தையும், கொடு மையான ஆட்சியையும் அறியாதிருந்தாரோ? இல்லை, அவர் யாவ ற்றையும் அறிந்தவர், சர்வ வல்லமையுள்ளவர். அவரே ஆளுகை செய்கின்றார். அவர் தம்முடைய ஜனங்களுக்கு முன்குறித்த இரட் சிப்பை அருளினார். யார் மெய்யான தேவன் என்று மனக்கடினப்பட்ட பார்வோர் உணர்ந்து கொண்டான். நாம் ஆராதிக்கும் தேவனாகிய கர்த்தர் ஜீவனுள்ளவர். அவர் இன்றும் என்றென்றும் ஆளுகை செய்கி ன்றார். எனவே, உங்கள் முன்பாக இருக்கும் மலைபோன்ற பிரச்ச னைளை கண்டு மனம் தளர்ந்து போய்விடாமல், தேவனுடைய சமுக த்திலே உங்களை தாழ்த்தி தேசத்திற்காக வேண்டுதல் செய்யுங்கள். கர்த்தர்தாமே, சபைகளை துன்புறுத்திய சவுல் என்று அழைக்கபட்ட புவலை நோக்கி: முள்ளில் உதைப்பது உனக்கு கடினம் என்று அன்று பவுலுக்கு கூறினார். நம்முடைய கர்த்தர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவறாயிருக்கின்றார். கர்த்தர் நம் பக்கத்தில் இருப்பதால், கலங்காதிருங்கள். உங்கள் அழைப்பிலே உறுதியாய் நிலைத்திருங்கள். தேவனை நோக்கி பாருங்கள். அவர் தேசத்திலே இரட்சிப்பை உண்டு பண்ணுவார்.

**யாத்திராகமம் 2:23**

அவர்கள் அடிமைத்தனத் திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது.

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, உபத்திரவங்கள் நெருக்கங்களை கண்டு சோர்ந்து போய்விடாமல், உம் வார்த்தையில் உறுதியாய் நிலை த்திருந்து, உம்மை நோக்கி பார்க்கும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உன்னதத்தில் உயர்ந்தவர்

| தானியேல் 4:34 |
| --- |
| அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், |

பெரியவரும் பலத்தவருமாயிருக்கிற ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் மகத்துவம் பெருகி வானபரியந்தமும், அவனுடைய ஆளுகை பூமியின் எல்லைபரியந்தமும் எட்டியிருக்கிறது. பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரிகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார் என்று அந்த மகா ராஜாவுக்கு தேவனுடைய தாசனாகிய தானியேல் வழியாக சர்வ வல்லமையுள்ள தேவன் வெளிப்படுத்தியிருந்தார். உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக்கொடுக்கிறார் என்பதை ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறிந்திருந்தும், இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று அறிக்கையிட்டான். இந்த வார்த்தை ராஜாவின் வாயில் இருக்கும்போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, ராஜ்யபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று. சர்வ வல்லமையுள்ள தேவன் முன்குறித்த காலம் நிறைவேறும் அவன் மிருகங்களோடே, மிருகங்களைப் போல சஞ்சரித்து வந்தான். ஒருவேளை இன்றும் சிலர் அந்த ராஜாவைப் போல தங்கள் ஆளுகையை குறித்து மேன்மைபாராட்டலாம். தேசத்திலே உண்டாயிருக்கும் செழிப்புக்கள் தங்களுடைய ஆக்கங்கள் என்று பறைசாட்டிக் கொள்ளலாம். பெருமையானவைகளை பேசிக் கொள்ளலாம். ஆனால், உன்னத்திலே வீற்றிருக்கும் உன்னதமான தேவன் மனிதர்களுடைய இருதயங்களின் நினைவுகளை ஆராய்தறிகின்றவர்கள். அவர்களுடைய பெருமையான பேச்சுக்கள் அறிந்திருக்கின்றார். கர்த்தர் முன்குறித்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாருக்கு புத்தி திரும்ப வந்தது. அவன் உன்னதமானவரை ஸ்தோத்தரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினான். அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள் அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார், அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றான். ஆம் பிரியமானவர்கள், தேசத்திலே தேவ சித்தம் நிறைவேறும்வரை, பொறுமையோடு காத்திருந்து ஜெபம் செய்யுங்கள். கர்த்தர் ராஜரீகம் பண்ணுகின்றார்.

**ஜெபம்**: அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்துகின்ற தேவனே, உலகிலே நடப்பவைகளை நீர் அறிந்திருக்கின்றீர். உம்முடைய சித்தம் நிறைவேறும்படி காத்திருக்கும் உள்ளத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சேனைகளின் கர்த்தர்

இந்துதேசம்முதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள நூற்றிரு பத்தேழு நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேரு ராஜா, அம்மெதா த்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியனை மேன்மைப் படுத்தி, தன்னிடத்திலிருக்கிற சகல பிரபுக்களுக்கும் மேலாக அவனு டைய ஆசனத்தை உயர்த்திவைத்தான். ஆமான் என்பவன், தனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்ப டுத்தி, ராஜ்யமெங்கும் இருக்கிற தேவனுடைய ஜனங்களை சங்க ரிக்க அவன் வகைதேடினான். அதற்காக சதித்திட்டம் செய்து, அதற்கு வேண்டிய பணத்தையும், ராஜாவின் அனுமதியையும் பெற் றுக்கொண்டான். ஆனால் அவனோ, எல்லாவற்றிற்கும் மேலாக தேவாதி தேவன் ஆளுகை செய்கின்றார் என்பதையும் அவர் தம்முடைய ஜனங்க ளை விசாரிக்கின்றார் என்பதையும் அறியாதிருந்தான். தங்கள் அக்கிர மங்களினிமித்தம் அடிமைத்தனத்திற்குற்பட்ட தேவ ஜனங்கள், தேவ தயவைப் பெற்றுக் கொள்ளும்படி, தங்கள் தேவனை நோக்கிப் பார்த்து, உபவாசித்தார்கள். தேவாதி தேவன் தாமே, ராஜாவின் மனதை மாற்றிப் போட்டார். ஆமானுடைய தந்திரங்கள் அவனுக்கும் அவன் குடும்பத்தா ரெல்லோருக்கும் அழிவாக மாறியது. ஆம் பிரியமானவர்களே, எந்தப் பெரிய ராஜ்யமோ பெரிய ராஜாவோ, தேவன் நியமித்த திட்டத்திற்கு எதிராக செயற்பட முடியாது. சர்வ வல்லமையுள்ளவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும். இந்த இரகசியத்தை பூமியை ஆளுகின்ற அதிகாரிகள் அறியாதிருக்கலாம். அதை அறிந்த நாம், நமக்கு எதிராக செயற்படும் அதிகாரங்களை குறித்து சற்றும் கலங்காமல், நம்மைத் தாழ்த்தி தேவனாகிய கர்த்தரை நோக்கி பார்போமாக. அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார். வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார். இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார். நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள் ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன். என்று வேத வசனங்கள் வழியாக தேவன்தாமே நம்மை பெலப்படுத்து கின்றார். எனவே, தேசத்திலே மாறுதல்களை விரும்புகின்றவர்கள், தேவனுக்கு முன்பாக உங்களை தாழ்த்துங்கள். உங்கள் வழிகளை அவரிடம் ஒப்புக் கொடுங்கள். தேவ சமுகத்திலே ஜெபத்திலே தரித்திரு ங்கள். பெரிதான விடுதலையை தேசத்திலே உண்டாக்குவார். சேனை களின் கர்த்தர் நம்மோடிருக்கிறார் யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.

**சங்கீதம் 46:11**

**சேனைகளின் கர்த்தர் நம்மோ டிருக்கிறார்;**

**ஜெபம்:** எங்கள் அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூ லமான துணையுமான தேவனே, உம்முடைய பலத்த கிரியைகளை நாம் காணும்படி உம்முடைய பாதத்திலே அமர்ந்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எனக்கு தந்த பொறுப்பு

**2 பேதுரு 1:10**

**ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்;**

ஒரு ஊரின் ராஜாவானவன், ஊரிலிருந்த அணைக்கட்டொன்றில் சிறிய வெடிப்பொன்று காணப்பட்டதால், அதனால் பெரும் அபாயம் ஏற்படுமுன், அதை சிபார்சு செய்து, வேண்டிய திருத்த வேலைகளை செய்யும்படி தனக்கு நம்பிக்கையான ஒரு ஊழியனை அவ்விடத்திற்கு அனுப்பி வைத்தான். குறிப்பிட்ட ஊழியனானவன், போகின்ற வழியிலே, ராஜா வினால் வரிவசூலிப்பதற்காக அனுப்பட்டவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை ஒழுங்காக செய்யாமல், அசத் தியாயிருப்பதைக் கண்டு, மிகவும் கோபமடைந்தான். அவ்விடத்திலே தரித்திருந்து, மற்ற ஊழியர்களை கடிந்து கொண்டு, அவர்களோடு வாக்குவாதம் செய்தான். இதனால் குறிப்பிட்ட ஊழிய னடைய மனநிலை மாற்றமடைந்தது. தான் அனுப்பப்பட்ட பிரத்தியே கமான நோக்கத்தை மறந்து போனதால், அணைக்கட்டு வெடித்து, அந்த ஊரிலே பெரும் வெள்ளம் ஏற்பட்டது. அதைக் கேள்விப்பட்ட ராஜாவானவன் குறிப்பிட்ட ஊழியனோடு பிரியமாக இருப்பானோ? பிரியமானவர்களே உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் குறித்து இன்று சிந்தித்துப் பாருங்கள். கோணலும் மாறுபாடான சந்ததியின் நடுவிலே நாம் வாழ்கின்றோம். தேவ ஜனங்கள் கூடும் இடங்களிலேயும், சத்துருவானவன் களைகளை விதைத்திருப்பதை அறிந்திருக்கின்றோம். சில வேளைகளிலே சபைகளிலும் சக ஊழியர்கள் கடமையை தவறுவதைக் காண்கின்றோம். ஒருவன் தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை மறந்து, நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று மற்றவர்களின் குறைகளினாலே தன் மனதை நிறைத்து, தன் மனதை குழப்பிவிட்டால் அவன் நிலை தவறிய மனிதனாக இருப்பான். மற்றவர்களின் அசதியியை கண்டு நீங்களும் அசதியுள்ளவர்களாக மாறிவிடாதபடிக்கு விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஒருபோதும் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும். எனவே மற்றவர்களிடத்திலே குறைகளை கண்டால், அவர்களுடைய குறைகளினிமித்தம் உங்கள் அழைப்பை மறந்து போய்விடாதிருங்கள். குறைகளை கண்டால் அவர்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் வாழ்விலே தேவ சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, என் வாழ்வைக் குறித்த உம்முடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று நான் பகுத்தறியும்படி பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – எபிரெயர் 12:1–2

# குறையற்ற ஒரு வருஷம்

நீ பாடசாலை நாட்களிலே, எந்தக் குறையுமின்றி கடந்து சென்ற பூர ணமான ஒரு வருஷம் ஒன்று உண்டா? நீ வேலை செய்யும் நாட்களிலே, குறை கூறாமல் கடந்து சென்ற ஏதாவது ஒரு வருஷத்தை உன்னால் குறிப்பிட முடியுமா? நீ வீட்டிலே முறுமுறுக்காமல இருந்த வருஷம் ஒன்றை குறிப்பிட்டு கூற முடியுமா? நீ சபையிலே குழப்பமில்லாமல் கட ந்து சென்ற ஒரு வருஷம் உண்டா? பிரச்சனைகள், உபத்திரவங்கள், கல கங்கள், குழப்பங்கள், முறையீடுகள், தப்பாகவிளங்கிக்கொள்ளுதல், வாக் குவாதங்கள், பிரிவினைகள் என்று எதிர்மறையான வார்த்தைகளே மனி தர்களுடைய வாழ்க்கையிலே அவர் களுடைய வாயிலிருந்து பிறக்கின்றன. பொதுவாக அவை தங்களை குறித்ததல்ல மாறாக மற்றவர்களை குறித்ததாகவே இருக்கின்றது. பாட சாலையிலே ஆசிரியர்கள், அதிபரை குறித்த குறைகள். வேலையிலே அதிகாரிகளைக் குறித்த முறையீடுகள். சபையிலே மேய்ப்பர்கள், மூப்ப ர்கள், விசுவாசிகளைக் குறித்த குறைகள். வீட்டிலே பெற்றோர் மூத்தோ ரைக் குறித்த முறையீடுகள். தேசத்திலே அதிகாரிகளைக் குறித்த குறை கள். இப்படியாக சில தேவ பிள்ளைகளும்கூட தங்களுக்கு மேலாக இரு க்கும் அதிகாரிகளைப் பற்றி குறைகளை கூறுவதற்கும், அவர் கள் காரி யங்களை எப்படி செய்ய வேண்டும் என்ற ஆலோசனைகளை வழங்கு வதிற்கும் எப்போதும் ஆயத்தமாகவே இருக்கின்றார்கள். அப்படியா னால், அவர்கள் தங்களை முற்றிலும் தேறின, சம்பூரணமான மனிதர்கள் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, நீங்கள் மற்றவ ர்களிலும் சிறந்தவர்களா? எடுத்துக்காட்டாக, நீங்கள் மற்ற விசுவாசிக ளைவிட நீடிய பொறுமையுள்ளவர்கள் என்று நினைக்கின்றீர்களா? உங் களோடு தேவன் அதிகமாக பேசி, உங்களுக்கு அதிக ஞானத்தை கொடு த்திருக்கின்றார் என்று எண்ணுகின்றீர்களா? அப்படியானால், மற்றவர்க ளுடைய குறைகளை சுட்டிக் காண்பிப்பதை விட்டுவிட்டு நீங்கள் பெற் றுக் கொண்ட தெய்வீக சுபாவங்களை சாதகமற்ற சூழ்நிலைகளிலே காண் பியுங்கள். கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே நாம் குற்ற மற்றவர்களாகவும் கபடற்றவர்களாகவும், தேவனுடைய மாசற்ற பிள்ளை களுமாயிருக்கும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். எனவே, பூரண மற்ற இந்த உலகத்திலே எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்யமாக இரு க்க கற்றுக் கொள்ளுங்கள். தேவ சித்தத்தை உங்கள் வாழ்விலே நிறை வேற்றுங்கள். கர்த்தருக்கென்று நல்மனதோடே எல்லாற்றையும் செய்யுங்கள்.

**பிலிப்பியர் 2:16**

எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.

**ஜெபம்**: என் தாழ்மையில் என்னை நினைத்த தேவனே, குறைகளை தேடுவதிலும், பேசுவதிலும் நான் என்னுடைய நேரத்தை செலவிடாமல், எனக்கு கொடுக்கப்பட்ட பொறுபை நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள்| ஆகஸ்ட் 7 | 📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 4:19

# குறைகளின் நீண்ட பட்டியல்

ஒரு கம்பனியிலே புதிதாக சேர்ந்த மனேஜரொருவர், தன் பிரிலுள்ள வேலைகளை ஆராய்ந்து பார்த்து, அங்குள்ள குறைகளை பட்டியல் படுத்தினார். அந்தப் நீண்ட பட்டியலை எடுத்துக் கொண்டு, கம்பனியின் இயக்குனரை சந்திக்கும்படி சென்றிருந்தார். அந்தப் பட்டியலை இயக் குனர் பார்த்த பின்னர், அந்த மனேஜரை நோக்கி: நல்லது, நீ இந்தப் பிரிவிலுள்ள குறைகளை பட்டியல் படுத்துவதற்கு அதிக நாட்களை செலவு செய்திருக்கின்றாய். இப் போது, அவைகளை நிவர்த்தி செய் யும்படிக்கான வழிமுறைகளை ஏற் படுத்து. குறைகளைநிவிர்த்தி செய்து, இந்த கம்பனியின் சொந்தக்காரரு க்கு நல்ல ஆதாயம் வரும்படி வியா பாரத்தை முன்னெடுத்து செல்வதற்காகவே நானும் நீயும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றோம் என்று கூறினார். ஆம் பிரியமானவர்களே, நாம் நம்முடைய வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். வாழ்வின் குறைகளைபாராமுகமாக விட்டுவிட முடியாது. அதே வேளை யிலே குறைகளை பார்ப்பதோடு நின்றவிடாமல், அவைகளை நிறைவா க்கும் வழிகளை நாம் நாடித் தேட வேண்டும். பொதுவாக மனிதர்கள் தங்கள் சொந்த வாழ்வில், அவர்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் குறை களை பாராமல், மற்றவர்களுடைய குறைகளைபற்றி பேசுவதிலேயே அதிக நேரத்தை செலவிடுகின்றார்கள். ஒருவன் தன் வீட்டிலுள்ள குறை களை கண்டு கொள்ளாமல், நாட்டின் தலைவருடைய குறைகளை பேசிக் கொண்டிருந்தான். அவன் தன் வீட்டின் தலைவானாக இருந்த போதும், வீட்டிலே தன்னுடைய முழுக் கட்டுப்பாட்டிலிருக்கும் குறை களை நிவர்த்தி செய்ய மனதற்றவனாக இருந்தான். நாம் அப்படியி ருக்கலாகாது, என்னுடைய கண்களிலே பெரிதான மரக்குத்தியை வைத்துக் கொண்டு, நான் மற்றவன் கண்ணைப் பார்ப்பது நியாயமல்ல. முத லாவதாக, என்னுடைய கண்கள் தெளிவாக பார்க்கும்படி நான் என்னு டைய கண்களை சுத்தம் செய்ய வேண்டும். அந்தப்படி, முந்தின நடக் கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனு டைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளு ங்கள். குறைகளை நிறைவாக்கும் தேவன் நம்மோடிருக்கின்றார். பெலவீனங்களிலே பெலனாய் வரும் தேவன் நம்மோடிருக்கின்றார். எனவே, நிறைவை நோக்கி முன்னேறுங்கள்.

**எபேசியர் 4:23**

**உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி**,

**ஜெபம்**: கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே என் குறைகளை நிறைவாக்கும் தேவனே, குறைகளை பேசி, மன குழப்பத்தோடு வாழாமல், நிறைவை நாடும் வாழ்க்கை வாழ உணர்வுள்ள இருத யத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | ஆகஸ்ட் 8 📖 மாலை வாசகம் – 3 யோவான் 1:4

# ஆறுதல் தரும் பிள்ளைகள்

மழை காலம் ஆரம்பித்தபோது மண்வீட்டின் கூரையில் வேயப்பட்ட சில ஓலைக் கிடுகுகள் வழியாக தண்ணீர் வீட்டிற்குள் சொட்டுச் சொட்டாக ஒழுகியதை வீட்டிலிருந்த யாவரும் கண்டார்கள். பிள்ளைகளில் இளையவன் தகப்பனானவரை நோக்கி: நாங்கள் எப்படி மழை காலத்தை கடக்கப் போகின்றோம்? இதை ஏன் திருத்தவில்லை? எப்படி இங்கே வாழ்வது என்று மனக்கசப்போடு முறையிட்டுக் கொண்டான். பிள்ளைகளில் மூத்தவன், சமையலறைக்குள் ஓடிச் சென்று, ஒரு சட்டியை எடுத்து, தண்ணீர் ஒழுகும் இடத்தில் வைத்து விட்டு, தன் தகப்பனானவரை நோக்கி: அப்பா, நாளை காலையிலே, சில பச்சைக் கிடுகுகளை செய்து, தற்காலிகமாக ஒழுக்குள்ள இடத்தை அடைத்துக் கொள்வோம் என்று கூறினான். எளிமையான வாழ் க்கை வாழும் பெற்றோர், மூத்தவனுடைய வார்த்தைகளை கேட்ட போது மகிழ்ச்சியடைந்தார்கள். தங்களுடைய இளைய குமாரனும், தங்கள் மூத்தவனைப் போலவே வளர வேண்டும் என்ற விருப்பமுள்ளவர்களாக இருந்தார்கள். அப்படியாகவே, நம்முடைய பரம பிதாவும், நாம் அவருடைய திருக்குமாரனாகிய இயேசுவைப் போல மாற வேண்டும் என்பதையே விரும்புகின்றார். இன்று சிலர், குறைகளை சுட்டிக் காட்டி அதனால் உண்டாகும் விளைவுகளைக் கூறுவதில் பெருமிதம் அடைகின்றார்கள். தங்கள் சொந்த குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டியவர்கள், குடும்பத்திற்கு வேதனை உண்டாக்குகின்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். நாம் நம்முடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். விசேஷமாக தேவனுடைய ஊழியங்களிலே நாம் குறைகளை நிறை வாக்கும் மனநிலையுடையவர்களாக மாற வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட சம்பவத்திலே, மூத்தவன் பெரிதான காரியங்களை செய்யவில்லை. ஆனால், தங்களிடம் இருக்கும் வளங்களை கொண்டு, குறைகளை நிவர்த்தியாக்க வேண்டும் என்ற மனநிலையுடையவனாக இருந்து வந்தான். நிறைவிலும் குறைவிலும் ஆறுதல் தரும் மகனாக வாழ்ந்து வந்தான். நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும், நம்முடைய மாம்சத்தின் எண்ணங்களை நிறைவேற்றாமல், எப்போதும், எந்த சூழ்நிலையிலும் மெய்யான நீதியிலும் பரிசுத்திலும் தேவனுக்கு பிரியமுள்ள பிள்ளைகளாக வாழு ம்படி நாட வேண்டும். தேவனாகிய கர்த்தர் நம்மோடு இருப்பதால், குறைவு எனக்கு இல்லை என்று அறிக்கையிடுவதிலே உறுதியாய் தரித்திருக்ககடவோமாக.

**2 கொரிந்தியர் 5:9**

அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்.

**ஜெபம்**: அன்பின் பிதாவாகிய என் தேவனே, எக்காலத்திலும், உம்முடைய திருக் குமாரனின் சாயலிலே நான் அனுதினமும் பெருகும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாசத்தின் பரீட்சை

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனாவன், தன் குடும்பத்திலே சில முக்கிய அலுவல்களை செய்து முடிக்கும்படி வெளியூருக்கு செல்ல வேண்டியதாக இருந்தது. அவன் முன்னெடுக்கும் பிரயாணங்கள் வாய்க்கும்படி தேவனை வேண்டிக் கொள்வது அவனுக்கு வழக்கமாக இருந்தது. அவ்வண்ணமாகவே இந்த தடவையும் அவன் வேண்டுதல் செய்து கொண்டு, குறித்த நாளிலே தன் பிரயாணத்தை ஆரம்பித்தான். பிரயாணத்தை ஆரம்பித்த நாளிலிலே, மனக் குழப்பம் ஏற்படும்படியாய் பல தடைகள் ஏற்பட்டிருந்தது. அவனுக்கு மட்டுமல்ல, அவனோடு பிரயாணம் சென்ற யாவருக்கு அந்தத் தடை ஏற்பட்டிருந்தது. ஆனாலும், அவன் நான் என் தேவனாகிய கர்த்தரிடம் வேண்டுதல் செய்தேன். அவர் என் சத்தத்தை கேட்கின்ற தேவன் என்றபடியால் அவன் குழப்பமடையாமல் பொறுமையுள்ளவனாக இருந்தான். கர்த்தர் அவனுடைய பிரயாணத்தை வாய்கப் பண்ணினார். அவன் செய்து முடிக்க வேணடும் என்று திட்டமிட்டிருந்து காரியங்கள் யாவற்றையும் சிறப்பாக செய்து முடிக்கும்படி கர்த்தர் வழியை உண்டு பண்ணினார். அவர் எதிர்பாராத நன்மைகளை அவனுக்கு அருளினார். என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக் கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது என்று பரிசு த்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். எனவே, நீங்கள் ஒரு காரிய த்தை தேவனிடம் கேட்டிருந்தால், அவருடைய சித்தப்படி கேளுங்கள். உங்கள் வாழ்க்கையிலே நீங்கள் செய்து முடிக்க வேண்டிய காரியங்களை குறித்து, விண்ணப்பித்திருந்தால், தேவனாகிய கர்த்தரிடத்திலே விசுவாசமாயிருங்கள். உண்மையாக நீங்கள் தேவனை விசுவாசித்தால், அவர் காரியத்தை வாய்க்ப்பண்ணுவார் என்ற மனஉறுதியோடு பொறுமை யாக இருங்கள். நீங்கள் நினைத்த பிரகாரம் காரியங்களை நடைபெற வேண்டும் என்று எண்ணாமல், நாம் நினைப்பதற்கும் வேண்டிக் கொள் வதற்கும் மிக அதிகமாக செய்யும் கர்த்தரை நோக்கி காத்திருங்கள். அவர் காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்.

**யாக்கோபு 1:3**

**உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.**

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, எதிரிடையான சூழ்நிலையிலே நான் மனம் தளர்ந்து போகாமல் விசுவாசத்திலே உறுதியாய் நிலைத்திருக்கும்படி எனக்கு பொறுமையை கற்றுத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

 📖 மாலை வாசகம் – எபேசியர் 6:10 – 13

# தேவ சித்தத்திற்கு இடங் கொடுப்போம்

ஒரு சமயம், தேவனுடைய ஊழியராகிய பவுல் எருசலேமிற்கு திரும்பிய போது, சிலர் அவனுக்கு விரோதமாக எழுந்து அவனை அடித்து அவனை கொன்று போடும்படி எண்ணமுள்ளவர்களாக இருந்தார்கள். நித்திய ஜீவனை அடையும் நற்செய்தியை அவன் அறிவித்ததாலேயே, யூத மார்க்கத்தர் அவன்மேல் கோபம் கொண்டு, பட்டணம் முழுவதும் பெரும் கலகத்தை ஏற்படுத்தினார் என்று பரிசுத்த வேதாகமத்திலே காணலாம். ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பது தேவ னுடைய சித்தமாக இருக்கின்றது. அந்த சித்தமானது மனிதர்களு டைய வாழ்க்கையிலே நிறைவே றாதபடிக்கு இருளின் அதிகாரமா னது, நற்செய்தியை அறிவிக்கின் றவர்களுக்கு எதிராக கொண்டிக்கி ன்றது. எனவே நற்செய்தியின் நிமித்தம் உண்டான உபத்திரவங்களை கண்டு, பயந்து சோர்ந்து போகாமல், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படி மிகவும் உறுதியாக இருந்த பவுலைப் போல நாமும் கர்த்தருடைய கரத்தின் கருவிகளாக, பெற்ற பணியை நிறைவேற்றி முடிக்கும்படி செயற்பட வேண்டும். அன்று இராத்திரியிலே பவுல் சிறையிலே போடப்பட்டிருக்கையில், கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே, திடன்கொள் நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடு த்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார். பவுல், ரோமாபுரிக்கு பிரயாணம் செல்வது தேவனுடைய சித்தமாக இருந்தது. தேவ ஊழியராகிய பவுல், அந்த பிரயாணத்தை மேற்கொண்ட போது, இன்னும் பல தடைகளும், உபத்திரவங்களும் ஏற்பட்டது. ஆனால், பவுலோ, கர்த்தரால் அவனுக்குண்டான வார்த்தையில் உறுதியாய் நிலைத்திருந்தான். நாமும் தேவ சித்தத்தை நிறைவேற்ற நம்மை ஒப்புக் கொடுக்கும் போது, வாழ்க்கையிலே உபத்திரவங்களும் தடைகளும் உண்டாகலாம். அவைகளை கண்டு நாம் சோர்ந்து போய்விடக்கூடாது. கர்த்தர் போ என்றால் நாம் போவதற்கும், அவர் திரும்பு என்றால் நாம் திரும்புவதற்கும் ஆயதமுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆம், பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தருடைய சித்தத்தை நம் வாழ் வில் நிறைவேற்றி முடிக்காதபடி அந்தகார கிரியைகளை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே, சூழ்நிலைகளை கண்டு பின்னிட்டுத் திரும்பாமல், தேவ சித்தம் நிறைவேறும்படி கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பெலப்படுவோமாக.

**அப்போஸ்தலர் 21:14**

**கர்த்தருடைய சித்தம் ஆக க்கடவதென்று அமர்ந்திருந் தோம்**

**ஜெபம்**: பிதாவாகிய தேவனே, உம்முடைய சித்தத்தை நிறைவேற்றும் பாதையில் ஏற்படும் உபத்திரவங்களையும் சவால்களை கண்டு சோர்ந்து போகாமல் முன்னேற எனக்கு பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | ஆகஸ்ட் 11

📖 மாலை வாசகம் - 2 கொரி 10:4-6

# போகும் வழியை ஆராய்தறியுங்கள்

யோனா என்னும் ஒரு மனிதனானவன் பிரயாணப்பட்டிருந்தான். அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசியாக இருந்ததினால், கர்த்தருடைய வார்த்தை இன்னதென்பதை நன்றாக அறிந்திருந்தான். கர்த்தர் போகும்படி கூறிய இடத்திற்கு பிரயாணப்பட்டு போகாமல், கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக எதிரான திசையிலே கப்பலேறி பிரயாணப்பட்டிருந்தான். அதனால், அவன் தனக்கும் தன்னனோடு கப்பலிலே இருந்த பயணிகளுக்கும் பெரிதான ஆபத்தை உண்டு பண்ணினான். கர்த்தர் அவன்மேல் கிருபையுள்ளவராக இருந்தபடியால், உபத்திரவங்கள் வழியாக தேவ சித்தம் இன்னதென்பதையும், அதை எப்படி நிறைவேற்றுவதென்பதையும் யோனாவிற்கு கற்றுக் கொடுத்தார். தேவனாகிய கர்த்தர் பேசும் போது, தேவனுடைய பிள்ளைகள் அவருடைய வார்த்தைகளை கேட்டு அதற்கு கீழ்படிந்து நடக்கும் போது அவர்களுடைய வாழ்விலே நன்மையுண்டாகின்றது. ஆனால், தேவ வார்த்தைகளை கேட்டும், அதற்கு கீழ்படியாமல், தேவன் கொடுத்த சுத்த மனசாட்சிக்கு விரோதமாக தங்கள் வாழ்க்கையிலே கிரியைகளை நடப்பிக்கி ன்றவர்கள், தங்களுக்கும் தங்களை சூழ இருக்கின்றவர்களுக்கும் உபத் திரவங்களை உண்டு பண்ணிக் கொள்கின்றார்கள். ஒரு பிள்ளையானவன், சொல் கேட்காமல் தொடர்ந்தும் தவறான வழியிலே நடக்கும் போது, அவனை நேசிக்கின்ற அவனுடைய தகப்பனானவர் அவன் தவறுகளை அவனுக்கு உணர்த்தாதிருப்பாரோ? அவன் தவறுகளை உணராமல் இரு க்கும் போது அவனை கண்டியாமல் விட்டுவிடுவாரோ? தன் புத்திரைன நேசிக்கின்ற தகப்பனானவர் அவனை சிட்சிக்கின்றார். கீழ்படியாமை யானது பிள்ளைகளுடைய வாழ்க்கையிலே வரும் போது, சிட்சையா னது இன்றியமையாததாக இருக்கின்றது. எனவே, நம் ஆத்துமா நம்மில் தொய்ந்து போகையில், நாம் நம் வழிகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேவனுக்கு விரோதமான எந்த மனித எண்ணங்களையும் நாம் நம்மில் நிலைகொள்ளவிடாமல், கர்த்தர் கற்பித்த வழியிலே வாழ நாம் நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுக்க வேண்டும். தேவனுடைய தீர்க்கதரிசியாகிய யோனா, மீனின் வயிற்றிலிருந்து, தன் நிலைமையை உணர்ந்து, அறிக்கையிட்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். அப் பொழுது அவனுடைய விண்ணப்பம் கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்திலே வந்து எட்டியது.

**யோனா 2:7**

**என் ஆத்துமா என்னில் தொய்ந்துபோகையில் கர்த்தரை நினைத்தேன்;**

**ஜெபம்:** உன்னதமான தேவனே, பொய்யான மாயையைப் பற்றிக்கொண்டு எனக்கு வரும் கிருபையைப் போக்கடிக்காமல், உம்முடைய சித்தத்தின்படி செய்ய உணர்வுள்ள இருதத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

சனி | ஆகஸ்ட் 12

📖 மாலை வாசகம் – சங்கீதம் 119:105

# தடைகளுக்கு காரணர் யார்?

இன்று காலை ஆராதனைக்கு வரும் வேளையிலே தடைகள் இருந்ததால், ஆராதனைக்கு முன்குறித்த நேரத்திற்கு வரமுடியவில்லை என்று ஒரு விசுவாசியானவன் கூறிக் கொண்டான். அப்படி, என்ன தடை ஏற்பட்டது என்று அவன் நண்பனானவன் கேட்ட போது, அவன் மறுமொழியாக: காலை எழுந்திருப்பதற்கு தாமதமானதால், நெடுஞ்சாலையிலே சற்று வேகமாக வந்தேன். பொலிசார் இடைநிறுத்தி எச்சரிப்போடு, பணம் கட்டும்படியாக அபராத சீட்டை வழங்கினார்கள் என்றுகூறினான். அதனால், 30 நிமிடங்களுக்கு மேல் தாமதமாகி விட்டது என்றான். அதற்கு நண்பனானவன் மறுமொழியாக: நண்பா, நீ ஆராதனைக்கு நேரத்தோடு வருவதற்கான தடை பொலிசார் அல்ல, நீ தான் அதற்கு காரணம். ஞாயிறு ஆராதனை இருக்கின்றது என்று அறிந்தும், நேற்றிரவு நீ நேரத்திற்கு வீடு திரும்பவில்லை. அதனால்தான் நீ காலையிலே நேரத்தோடு எழுந்திருக்க உனக்கு முடியவில்லை. பொலிசார் உன்னை தடுத்து நிறுத்தியது தேவகிருபை என்று எண்ணிக் கொள். ஒருவேளை நீ வேக மாக வாகனத்தை ஓட்டிச் சென்று, உன் உயிருக்கும், நெடுஞ்சாலையிலே பயணம் செய்யும் அப்பாவி பொது மக்களது உயிருக்கும் சேதம் உண்டாக்க முன்னதாகவே உன்னை அவர்கள் தடுத்தி நிறுத்தினார்கள். எனவே, உன் இருதயத்தை ஆராய்ந்து பார்த்து, தேவனை ஆராதிக்க இருக்கும் தடைகளை அங்கிருந்து அகற்றிப் போடு என்று அறிவுரை கூறினான். ஆம் பிரியமானவர்களே, நாமும் நம்முடைய வாழ்க்கையை நன்கு ஆராய்ந்து பார்போமாக இருந்தால், நம் வாழ்வில் ஏற்படும் குழப்பங்களுக்கும், தடைகளுக்கும் மூல காரணம் என்ன என்பது தெளிவாகும். ஆண்டுகள் கடந்து செல்லும் போது, விசுவாசிகள் தங்கள் வழிகளை ஆராய்ந்து பார்க்க தவறிவிடுவதால், உணர்வற்ற நிலையை அடைந்து விடுகின்றார்கள். மகா பரிசுத்தமுள்ள, பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படும் சிலாக்கியத்தை பெற்ற நாம், தேவ சமுக்திலே, தேவனை நோக்கி: தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும் என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும் என்று தேவ பக்தன் பாடியது போல, நாமும் நம் வழிகளை ஆராய்ந்து, நம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும்.

**சங்கீதம் 139:23**

**தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்;**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, நான் வேறு பிரிக்கப்பட்டவன் என்று கூறிக் கொண்டு, என் வழிகளில் வேதனை உண்டாக்காமல் வாழும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | ஆகஸ்ட் 13 | 📖 மாலை வாசகம் – நீதி 19:2 – 3

# யாவும் கடந்து போகும்

ஒரு மனிதனானவன் தன் பாடசாலையில் கல்வி கற்கும் நாட்களிலே ஏற்பட்ட சில பிரச்சனைகளை குறித்து சற்று சிந்தித்துப் பார்த்தான். குறிப்பாக சில ஆண்டுகளிலே கல்வி கற்கும் போது, சில மாணவர்களோடு ஏற்பட்ட தகறாறுகள் மற்றும் சில ஆசிரியர்களின் கண்டிப்பினால், பாடசாலையைவிட்டு விலகிப் போய்விட்டால் நல்லது என்று தோன்றிய நாட்கள் இருந்தது. அவ்வேளைகளிலே, அவன் தன் பெற்றோர் கூறிய அறிவுரையின்படி நடந்து கொண்டான். எல்லா பாடசாலைகளிலும் நூற்றுக் கணக்கான மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். அநேக ஆசிரியர்களும் நிர்வாகிகளும் கற்றுக் கொடுக்கின்றார்கள். பலர் ஒன்றுகூடும் இடத்திலே பிரச்சனைகள், கருத்து முரண்பாடுகள் இல்லாமற் போகாது. இருக்கும் இடத்தில் சில முரண்பாடுகள் ஏற்படலாம். இன்னுமொரு இடத்தில் வேறு சில பிரச்சனைகள் உண்டாகலாம். எனவே முரண்பாடுகளையும், பிரச்சனைகளையும் கண்டு விலகி ஓடாமல், அவைகளை தீர்க்கும் வழிகளையும் கற்றுக் கொண்டு, இனி அவைகள் ஏற்படாதபடிக்கு பார்த்துக் கொள்ள வேண்டும். சில வேளைகளிலே உபத்திரவங்களை சகித்துக் கொண்டு பொறுமையாக இருக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த பூமி நிரந்தரமற்றது. நம் வாழ்க்கையும், அந்த வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளும் அவ்வண்ணமாகவே இருக்கின்றது. அவை யாவும் கடந்து போகும் என்று அவனுடைய பெற்றோர் அவனுக்கு ஞாபகமூட்டியதுமுண்டு. பிரியமான சகோதர சகோதரிகளே, மேற்கூறிய சம்பவத்தை மையமாக வைத்து, உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். இன்று மனிதர்கள் பிரச்சனைகளைவிட்டு ஓடிச் செல்வதையே முதல் தீர்மானமாக எண்ணிக் கொள்கின்றார்கள். பாடசாலை, வேலை இடங்கள், சபை ஐக்கியம், உறவுகள், குடும்பங்கள், நட்புக்களை சீக்கிரமாக உடைத்துக் கொள்கின்றார்கள். நீடிய பொறுமை, மன்னிப்பு, மனந்திரும்புதல், மனம் வருந்துதல், இரக்கம் பாராட்டுதல், ஒப்புரவாகுதல் போன்ற தேவ வார்த்தைகள் தங்கள் வாழ்வில் நிறைவேற இடங் கொடுப்பதில்லை. பிரச்சனைகள் சூழ்ந்து கொள்ளும் போது, முதலாவதாக, தேவனுடைய பாதத்திலே அமர்ந்திருக்க கற்றுக் கொள்ளுங்கள். கால் துரிதமானவன் தப்பி நடக்கிறான் எனவே பொறுமையுள்ளவர்களாக இருங்கள். உங்கள் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிருங்கள். அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

**சங்கீதம் 37:7**

**கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு**

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, பிரச்சனைகளை கண்டு பதறிப் போகாமல், உம்முடைய பாதத்திலே அமர்ந்திருந்து, உம்முடைய வார்த்தையின் வழியிலே நடக்கும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள் | ஆவணி 14 | 🕮 மாலை வாசகம் – சங்கீதம் 1:1 – 6

# ஆரோக்கியமான வாழ்வு

ஒரு மனிதனானவன் தன் இளமை காலத்திலிருந்து அனுதின உடற் பயிற்சி செய்வதில் ஒரு போதும் தவறிப் போவதில்லை. அத்துடன் கிழமைக்கு மூன்று முறை உடற்பயிற்சி நிலையத்திற்கு சென்று, பயிற்றுநர் கற்பித்துக் கொடுப்பதை முறைப்படி பயிற்சி செய்து வந்தான். உடல் அசதியாக இருக்கும் நாட்களில் அந்த அசதியை மேற்கொள்ளும்படி எப்படியாவது பயிற்சி செய்ய வேண்டும் என்று காலையிலே எழுந்திருப்பான். விடுமுறைநாட்களிலும், நாடுவிட்டு நாடு சென்றாலும், அவன் உடற்பயிற்சி செய்வதை விட்டுவிடுவதில்லை. ஏனெனில் அதனால் அவனுக்கு உண்டாகும் நன்மைகளை அவன் நன்றாக அறிந்திருந்தான். உடற்பயிற்சி அவன் வாழ்வின் ஆரோக்கியமான வாழ்விற்கு இன்றியமையாததாக இருந்தது. அவனுடைய ஒழுக்கத்தை பலரும் பாராட்டினார்கள். பாருங்கள் ஒரு நாள் அழிந்து போகும் சரீரத்தை அவன் மிகவும் கவனத்துடன் பேணி பாதுகாத்து வந்தான். அழியாத நித்திய வாழ்விற்காக அழைப்பை பெற்ற நாம், நம்முடைய ஆத்துமாவை குறித்து இன்னுமதிகமாக கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். வேத வாசிப்பும், ஜெபமும், சபை கூடிவருதலும் நாம் விரும்பினால் செய்யலாம் அல்லாவிடில் விட்டுவிடலாம் என்று நாம் வாழக்கூடாது. உயர்வான சூழ்நிலைகளிலும், தாழ்வான நாட்களிலும் நாம் அனுதினம் வேதத்தை வாசித்து தியானிப்பதையும், ஊக்கமாக ஜெபம் செய்வதையும் விட்டுவிட்டால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்வு ஆரோக்கியமுள்தாக இருக்காது. வீட்டில் கொண்டாட்டங்கள் நடந்தாலும், ஒரு வேளை துன்பத்தின் பாதையிலே நடந்தாலும், அந்நாட்களை நாம் கடப்பதற்கும், நம்மை நோக்கி வரும் சூழ்நிலைகளை மேற்கொள்வதற்கும் தேவனுடைய வார்த்தைகளும், அவருடைய வழிநடத்துதலும் இன்றியமையாதது. அது மட்டுமல்லாமல், நாம் வாரந்தோறும் சபையாக கூடி தேவனை ஆராதித்து, தேவ செய்தியை கேட்டு, வேதத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். உடல் அசதியான நாட்களில் தவறாமல் உடற்பயிற்சி செய்த அந்த மனிதனைப் போல, நாம் சோர்வான நாட்களிலே தேவ சமுத்தை இன்னும் அதிகமாக நாட வேண்டும். ஆண்டவர் இயேசுவோடு நடக்காத நாட்கள் வீணான நாட்களாய் போய்விடும். எனவே கர்த்தரை சேவிப் பதிலிருந்து விடுமுறை எடுத்து விடாதிருங்கள். எங்கு சென்றால் வேத த்தை தியானித்து, ஜெபித்து, சபைக்கு சென்று தேவனை ஆராதிப்பதை விட்டுவிடாதிருங்கள்.

**ரோமர் 12:11**

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்;ஆவியிலே அனலாயிருங்கள்

**ஜெபம்:** அழியாத நித்திய ராஜ்யத்திற்காக என்னை அழைத்து தேவனே, என் வாழ்வின் நோக்கத்தை நான் மறந்து போய்விடாமல் எப்போதும் விழிப்புள்ளவனாக வாழ உணர்வுள்ள இருதத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இளைத்துப் போய்விடாதிருங்கள்!

பட்டணத்தின் மதிலை காக்கும்படிக்கு காவற்கோபுரத்திலிருந்த காவற்காரன், பல ஆண்டுகளாக தன் வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்து ராஜ சேவை புரிந்து வந்தான். குறித்த ஒரு இராத்திரியிலே அவன் மிகவும் களைப்படைந்திருந்தான். அந்த வேளையிலே "சுமார் 20 ஆண்டுகளாக நான் இந்த கோட்டையை காவல் காத்து வருகின்றேன். இன்றுவரைக்கும் எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை. இந்த நடுஜாமத்திலே யார்தான் வரப்போகின்றார்கள். சற்று இளைப்பாறுவோம்" என்று கூறி கண்ணயர்ந்து போனான். பல ஆண்டுகளாக கண்ணயராமல் அந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த எதிரியின் ஒற்றர்கள் அன்றிரவு, அந்தக் காவற்கோபுரத்தின் பக்கமாக பட்டணத்திற்குள் புகுந்து விட்டார்கள். இவ்வண்ணமாகவே, சிலருடைய ஆவிக்குரிய வாழ்வும் மாறிப் போய்விடுகின்றது. ஆதியிலே மிகவும் நன்றாக ஓடியவர்கள் பாதியிலே நின்று சற்று தூங்குகின்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். தேவனை அறிந்து முப்பது வருடங்களாகிவிட்டது. இந்த உலகிலே என்னத்தை அனுபவித்தோம்? இரவும் பகலுமாக தேவ ஊழியத்திற்கு உதவியாக இருந்தோம். பல பாடுகளை அனுபவித்தோம். சற்று ஓய்வெடுத்தால் என்ன என்று எண்ணங் கொண்டு, தாங்கள் உறுதியாய் நிலைத்திருந்த காரியங்களை விட்டுவிடுகின்றார்கள். கள்வன் வீட்டிற்குள் நுழையாதபடிக்கு அடைத்துக் காக்கப்பட்ட சிறு ஜன்னல்களை திறந்து விடும் மதியீனர்கள் போல, தங்களை சுற்றியிருந்த பாதுகாப்பின் வேலியின் சில பகுதிகளை உடைத்து விடுகின்றார்கள். ஆனால், எதிரியாவன் கெச்சிக்கின்ற சிங்கம் போல யாரை விழுங்கலாம் என்று சுற்றித்திரிவதை மறந்து போய்விடுகின்றார்கள். தாங்கள் தேவ காரியங்களை விட்டு ஓய்வெடுத்தாலும், எதிரி ஓயாமல் சுற்றித்திரிகின்றான் என்பதை உணராமல் நடந்து கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, தெளிந்த புத்தியு ள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எப்போதும் தரித்தவர்களாய், எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். ஆவியானவர்தாமே உங்களை பெலப்படுத்துவாராக.

**1 பேதுரு 5:8**

**தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்;**

**ஜெபம்:** சோர்ந்து போகும் வேளையிலே பெலன் தந்து நடத்தும் தேவனே, ஒருபோதும் நான் பின்வாங்கிப் போகாதபடிக்கு இளைத்துப் போன என் ஆத்துமாவை நீர் உயிர்ப்பித்து பெலன் தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | ஆகஸ்ட் 16

📖 மாலை வாசகம் – யோவான் 10:27 – 28

# கற்றறிந்தவைகளில் நிலைத்திரு

ஒரு விசுவாசியானவன், தன் வாலிப நாட்களிலிருந்து பாடசாலையிலே கற்று வந்த பழைய நண்பர்கள் மத்தியிலே பேச்சிலும், நடக்கையிலும், நன்மதிப்பையும், நற்சாட்சியையும் பெற்றிருந்தான். பல ஆண்டுகள் சென் றபின்பு, பழைய நண்பர்களில் சிலர், தங்கள் வருடாந்த ஒன்று கூடலில் பங்குபெற்றுமாறு, அழைத்தார் கள். நீ ஒன்றும் செய்ய வேண் டியதில்லை,நீ எங்களோடு இணை ந்து கொண்டாலே எங்களுக்கு போதும் என்று குறித்த ஒரு வரு டத்திலே, அவனை வருந்தி அழைத்ததால், விசுவாசியா னவன் இர ண்டு மனமுடையவனாக அவர்களுடைய ஒன்றுகூடலிலே பங்கு பற்று ம்படி சென்றிருந்தான். வைபவம் வழமைபோல நல்ல விசேஷ விருந்தி னருடைய உரைகளோடு ஆரம்பித்தது. சற்று நேரத்திற்கு பின்னர், நெறி யற்ற ஆடல் பாடல்களோடு கொண்டாட்டங்கள் ஆரம்பித்தது. விருந்திரு னர்கள் குடித்து, வெறித்து, களியாட்டங்களிலே ஈடுபடடார்கள். அங்கிரு ந்த பலருடைய நடை உடை பாவனைகள் யாவும் சாதாரண குடும்ப வாழ்விற்கே தகுதியற்றதாக காணப்பட்டது. இவைகளை கண்ட அந்த விசுவாசியானவன், தான் நிலையைவிட்டு தவறிவிட்டதை உணர்ந்து மனம் வருந்தினான். மறுநாளிலே, நடந்த சம்ப வத்தை தன் போதகரிடம் கூறினான். மனிதர்கள் இப்படியான களியா ட்டங்களிலே ஈடுபடுகின்றா ர்களே என்று ஆச்சரியப்பட்டான். போத கரானவர் அவனை நோக்கி: மகனே, அவர்கள் தாங்கள் அறிந்த விடய ங்களை மிகவும் சிறப்பாக தங்கள் முழு பெலத்தோடும், முழுமனதோடும் செய்து வருகின் றார் கள். ஆனால், நீயோ, நீ அறிந்தவை களி லிருந்து தவறிப் போனாய். அவர்கள் உன்னை அநேகம்தரம் தங்கள் ஒன்றுகூடலுக்கு வரும்படி, சலிப்படையாமல் வருந்தி அழைத்தார்கள் என்று கூறினாய். நீ அவர்க ளை எங்களுடைய விசேஷித்த விடுதலை கூட்டங்களுக்கு அவர்களை எப்போதாவது அழைத்ததுண்டா? சற்று சிந்தித்துப்பார். இது உன் வாழ் வின் முடிவு அல்ல. ஆனால், நீ கற்றுக் கொண்ட ஒரு நல்ல பாடமாக இருக்கட்டும். கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்து க்களை நீ நன்கு அறிந்தவன். நீ கற்று நிச்சயத்தவைகளில் நிலைத்திரு. அவைகளால் நீ அந்தகார வழிகளில் நடக்க நீதிநெறிகளை விட்டு, தீமை செய்ய மகிழ்ந்து, துன்மார்க்கருடைய மாறுபாடுகளில் களிகூருகிறவர்க ளுக்கும், மாறுபாடான பாதைகளிலும் கோணலான வழிகளிலும் நடக் கிறவர்களுக்கும் நீ தப்புவிக்கப்படுவாய் என்று அறிவுரை கூறினார்.

**2 தீமோத்தேயு 3:14**

**நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு**

**ஜெபம்**: நியாயத்தின் நெறிகளைத் தற்காத்து, தம்முடைய பரிசுத்தவான் களின் பாதையைக் காப்பாற்றுகின்ற தேவனே, இனி ஒருபோதும் நான் நிலை தவறிப்போய்விடாதபடிக்கு என்னை காத்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஏன் இன்னும் குழப்பம்?

ஒரு மனிதனானவன் தன் குடும்பத்தோடு ஒரு பழைய வீட்டில் வாழ்ந்து வந்தான். அந்த வீட்டின் பல பாகங்கள் பாழடைந்துபோயிற்று என்று கூறினாலும் மிகையாகாது. மழை நாட்களிலே,சுவர்களிலிருந்த வெடிப்பு வழியாக தண்ணீர் கசிந்து, வீட்டிற்குள் வருவதால், வீட்டின் படுக்கையறை அழுக்கு நிறைந்ததாகவும், உபயோகமற்றதாகவும் காண ப்பட்டது. ஆண்டுகள் கடந்து சென்ற பின்னர், வீட்டின் பொருளாதார நிலை மைகள் மேம்பட்டது. அந்த மனித னானவன், அந்த வீட்டை புனர்நிர் மாணம் செய்தான். அந்த வீடு ஒரு அழகான புதிய வீட்டைப் போல மாறி யது. பார்வைக்கு அழகானதாக வும், உபயோத்திற்கு உகந்ததாகவும் காட் சியளித்தது. ஆனாலும், ஒரு சுவரின் வெடிப்பை சரியான முறையில் திருத்தம் செய்யாதால், மழை நாட்களிலே தண்ணீர் கசிந்து உள்ளே வந்தது. அழகாய் காட்சியளிக்கும் அந்த வீடு மழை நாட்களிலே பாவ னைக்கு உகந்ததாக இருக்கவில்லை. அந்த வீட்டின் நிலைமை சிந்தை யில் வைத்தவர்களாய், நாம் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த உலகத்தின் அளவுகோலின்படி நாம் உயர்ந்தவர்களாகவோ, தாழ்ந்தவர்களாகவோ அல்லது கற்றவர்க ளாகவோ, கல்லாதவர்களாகவோ இருக்கலாம். ஆனால், ஆண்டவர் இயேசுதாமே பராபட்மில்லாமல் யாவருக்கும் தம்முடைய சமாதான த்தை கொடுத்திருக்கின்றார். ஆண்டவர் இயேசுவை அறிய முன்பு பாழ டைந்த நிலைமையிலிருந்த வாழ்வு மாற்றப்பட்டது. பல ஆசீர்வாத ங்களை பெற்றுக் கொண்டார்கள். வாழ்க்கை வளமாக தோன்றுகின்ற போதிலும், நாளடைவிலே சமாதானமற்ற வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றார்கள். அதற்கு காரணம் என்ன? அந்த வீட்டின் சுவரிலிருந்த வெடிப்பானது சரியான முறையில் திருத்தப்படாதது போல, இப்ப டிப்பட்ட மனிதர்களுடைய வாழ்விலுள்ள சில மாம்சத்தின் பழக்கங்கள் தங்கள் வாழ்வில் வருதற்கான வழிகளை முற்றாக அடைத்து விடாமல், பராமுகமாக விட்டுவைக்கின்றார்கள். வாழ்வு வளமானதாக காட்சியளித் தாலும், மாம்சத்தின் இச்சைகள் வாழ்வில் நுழைந்து சமாதானமான வாழ்வை கெடுத்துவிடுகின்றது. பிரியமான வர்களே, உங்கள் வாழ்க்கை ஆராய்ந்து பாருங்கள். சமாதானத்தை கெடுக்கின்ற காரியங்களை உண்டு பண்ணும் மாம்சத்தின் கிரியைகளை அடைத்துக் போடுங்டகள்.

**ரோமர் 8:12**

**ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்ப தற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல**

**ஜெபம்:** அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியை தந்த தேவனே, மாம்சத்தின் கிரியைகளுக்கு நான் மறுபடியும் அடிடைப்படாதபடிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பிரயாசத்தின் பலன் எங்கே?

அனுதின வேதவாசிப்பும் தியானமும் வாழ்வில் உண்டு. தவறாமல் ஜெபம் செய்தல், உபவாசம், வேதப்படிப்பு, ஜெபக்கூட்டங்கள், ஞாயிறு ஆராதனைகளை ஒன்றையும் தவற விடுவதில்லை. தானதர்மங்கள் தாராளமாக உண்டு. களியாட்டங்களுக்கு இடம் கொடுப்பதில்லை. ஆனால், ஏன் மனதிலும், வீட்டிலும், பூரணமான சமாதானம் இல்லை என்று ஒரு மனிதனாவன் தன் வாழ்க்கையை குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள், மிகவும் சுத்தமாக இருக்கும் தன் வீட்டில், துர்நாற்றம் வீசுவதை நுகர்ந்து குழப்பமடைந்தான். சமயலறை, குளியலறை, படுக்கையறை என்று எல்லா அறைகளையும் தேடிப்பார்த்து ஒன்றையும் காணவில்லை. பின்பு, வீட்டின் கூரையின் உட்புறத்தில் ஒரு மூலையில், ஒரு சுண்டெலி செத்திருப்பதை கண்டான். செத்துப்போன சிறிய எலியானது நறுமணம் வீசிக்கொண்டிருந்த அந்த முழு வீட்டையும் நாறப்பண்ணிற்று என்று ஆச்சரியப்பட்டான். அன்று இராத்திரியிலே, தன் குடும்ப வாழ்வை நன்கு ஆராய்ந்து பார்த்தான். பரிசுதத்தத்திற்குரிய பல காரியங்க்ள் வீட்டில் இருந்த போதும், குறிப்பிட்ட பழைய நண்பனைக் குறித்த குறை கூறுதல் அவ்வப்போது நடைபெறுவதை உணர்ந்து கொண்டான். நண்பனாய் இருந்தவன், செய்த துரோகத்தை மறக்க முடியாமல், தன் குடும்பத்தினருடைய இருதயத்தில் மூலையிலே இருக்கும் சிறிய கசப்பானது, தங்கள் வாழ்வில் மனச்சமாதானத்தை கெடுத்துக் கொண்டிருப்பதை அறிந்து கொண்டான். அந்த நாளிலிருந்து, உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள் என்று கர்த்தராகிய இயேசு கூறிய வார்த்தையை கடைபிடித்து தன் பழைய நண்பனுக்காக ஜெபம் பண்ணவும், அவனை ஆசீர்வதிக்கவும் ஆரம்பித்தான். நாளடைவிலே, தன் இருதயத்திலிருந்து பெரிதான பாரம் அகன்று போனதை உணர்ந்து கொண்டான். பிரியமானவர்களே, செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும். புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும். எனவே உங்கள் தியாகங்களும், கடும் பிரயாசங்களும் வீணாய் போகாதபடிக்கு, அசுத்தமானவைகைள முற்றிலும் அகற்றி விடுங்கள்.

**பிரசங்கி 10:1**

**செத்த ஈக்கள் தைலக்கார னுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்;**

**ஜெபம்:** நிறைவான வாழ்வை எனக்கு தந்த தேவனே, எந்த ஒரு குறைவையும் நான் என் இருதயத்திலே வைத்திருக்காதபடிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பெற்றபணியை நிறைவேற்றுங்கள்

**மத்தேயு 25:21**

**நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே,**

ஒரு எஜமானனானவன் ஊரிலே பாழடைந்த நிலையிலிருந்த பெரிதான மாளிகையை கொள்வனவு செய்து அந்த மாளிகையை புனர்நிர்மாணம் செய்யுபடிக்கு அநேக ஊழியர்களை வேலைக்கமர்த்தினான். ஊழியர்களின் திறமைகளின்படி, பல குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் குறிப்பிட்ட ஒரு பகுதி கொடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குழுவையும் மேற்பார்வை செய்வதற்கு தகுதி வாய்ந்த மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். மேற்பார்வையாளர்களை கண்காணிப்பதற்கு செயற்திட்ட அதிகாரிகள் இருந்தார்கள். இப்படியாக யாவும் ஒழுங்காகவும் கிரமமாகவும் அமைக்கப்பட்டு, கட்டுமானபணி ஆரம்பமானது. சில நாட்கள் சென்ற பின்பு, கூரை வேலை செய்ய பணிக்கப்பட்ட ஊழியர்களை சிலர், கூரையிலிருந்து கொண்டு, சுற்று மதில் கட்டும் சில ஊழியர்களின் நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சுற்று மதிலை கட்டுவதில் கவனம் செலுத்தாமல், தோட்டத்தில் வேலை செய்பவர்களில் சிலர் மரங்களின் நிழலில் இளைப்பாறுவதை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்படியாக சிலர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்வதில் நோக்கமாக இருக்காமல், மற்றவர்கள் அசதியாய் இருப்பதை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்ததால், தாங்களும் தங்கள் வேலையில் அசதியாய் இருக்கி ன்றோம் என்பதை மறந்து போனார்கள். கட்டுமானப் பணியின் நிலைப்பாட்டை அறியும்படிக்கு எஜமானனானவன் குறித்த நாளில் ஊழியர்கள் யாவரையும் அழைத்திருந்தான். கூரை வேலை செய்யும் ஊழியர்களை அழைத்து அவர்களுக்கு கொடுத்த வேலையை பரிசீலனை செய்து பார்த்தார். அப்போது, சில ஊழியர்கள் தங்களுக்கு கொடுப்பப்பட்ட வேலை யின் பகுதியை குறித்த நாட்களுக்குள் நிறைவேற்றி முடிக்கவில்லை. அதற்கான காரணம் என்ன என்று கூரை வேலை செய்யும் ஊழியர் களை எஜமானனானவன் கேட்டபோது, சில ஊழியர்கள் மறுமொழியாக: மதில் கட்டும் ஊழியர்களின் தவறுகளை சுட்டிக்காட்ட முயன்றார்கள். அப்போது எஜமானனானவன் கோபம் கொண்டான். உனக்கு கொடுக்கப்பட்ட வேலையிலே நீ உண்மையாய் இராமல், மற்றவனின் குறையை பார்த்துக் கொண்டிருந்தாய் என்று அவனை கடிந்து கொண்டான். பிரியமானவர்களே, தேவனிடத்திலிருந்து பெற்றபணியை நிறைவேற்று வதிலே கண்ணும் கருத்துமாக இருங்கள். நாம் பெற்றவைகளைக் குறித்தே கணக்கு ஒப்புவிக்க வேண்டிய காலம் சீக்கிரமாய் வருகின்றது.

**ஜெபம்**: உண்மையுள்ளவனென்று கருதி எனக்கு ஊழியம் தந்த தேவனே, நான் உம்மிடத்தில் பெற்றுக் கொண்டதை முழுமனதோடு நிறைவேற்றி முடிக்க உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| ஞாயிறு \| ஆகஸ்ட் 20 | 🕮 மாலை வாசகம் – எசேக்கியேல் 22:30 |
|---|---|

# திறப்பில் நிற்கும் வீரர்கள்

குறித்த நாள் ஒன்றிலே தீடீரென ஏற்பட்ட பெரும் புயல்காற்றினால், நகரத்தின் அலங்கத்தின் ஒரு பகுதி உடைந்து விழுந்து விட்டது. அதனால் ஏற்பட்ட திறப்பினால் (துவாரம்), நகரத்தின் பாதுகாப்பு பெலவீனப்பட்டது. அந்த திறப்பிலே இரவும் பகலும் காவல் புரியும்படிக்கு நகரத்தின் அதிகாரிகள் தொண்டர்களை முன்வரும்படி அழைப்பு விடுத்தார்கள். தங்கள் நகரத்தைக் குறித்து கரிசணையுள்ளவர்கள், மழையிலும், வெயிலிலும்அந்ததிறப்பின் வாசலிலே நின்று நகரத்தை காவல் காத்து வந்தார்கள். ஆனால், அந்த நகரத்தில் வசித்து வந்த சில வீணர்கள், "இதுவும் ஒரு நகரம், நரி பாய்ந்தால் விழுந்து விடும் அலங்கங்கள், அதை காவல் காப்பவர்களோ கும் மதியீனர்கள்" என்று தொண்டர்கள் சலித்துப் போகும்படி பரியாசம் பண்ணிக் கொண்டே இருந்தார்கள். தொண்டர்களுக்கு ஒத்தாசையாக இருந்து தங்கள் நகரத்தை காக்க வேண்டியவர்களோ, தெருவிலிருந்து தங்கள் நகரத்தின் நிலைமையயைக் குறித்து பரியாசம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அதைக் கேள்விப்பட்ட நகரத்தின் தலைவர், அந்த வீணர்களை பிடித்து, தண்டித்து, சிறையிலே அடைத்து வைக்கும்படி உத்தரவு கொடுத்தார். ஆம், பிரியமானவர்களே, பரலோகத்திலே தேவனுடைய சித்தம் செய்யப்படுவதைப் போல, இந்த பூமியிலும் செய்யப்படும்படிக்கு, திறப்பின் வாசலிலே நின்று ஜெபிக்கும்படிக்கு நாம் அழைப்பை பெற்றிருக்கின்றோம். ஏனெனில், துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. இன்று சபைகளிலே, சிலர் அநேக சவால்களின் மத்தியிலே, தங்களை அர்ப்பணித்து, பல தியாகங்களை செய்து, தேவனுடைய ஊழியத்தை கருத்தோடு செய்து வருகின்றார்கள். ஆனால், வேறு சிலர், திறப்பின் வாசலிலே நின்று ஜெபிப்பதற்கு பதிலாக, சபையையும், ஊழியர்களையும், விசுவாசிகளையும் விமர்சிக்கின்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். தெருவிலே இருந்து காவலாளர்களை பரியாசம் செய்த அந்த வீணர்களைப் போல, இவர்களும், இருளின் அதிகாரத்திற்கு ஆதரவாளர்களாக மாறிவிடுகின்றார்கள். நீங்களோ, அவ்வண்ணமாக இராமல், திறப்பின் வாசலிலே நின்று ஊக்கமாக ஜெபியுங்கள். பிதாவுக்கு பிரியமான பிள்ளைகளாயிருங்கள்.

**1 தீமோத்தேயு 2:1**

எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்;

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, நான் ஒருபோதும் பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காரதபடிக்கும், எப்போதும் உணர்வுள்ளவனாக வாழ்ந்து, குறைகள் நிறைவாகும்படி வேண்டுதல் செய்ய கற்றுத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வாக்குரைத்தவர் உண்மையுள்ளவர்

பாவத்திலிருந்து மீட்படையும் வழியை கண்டடையும்படி பிதாவாகிய தேவனால் வாக்களிக்கப்பட்ட மீட்பரின் வருகைக்காக ஆண்டாண்டு காலமாக தேவ மனுஷர்கள் காத்திருந்தார்கள். ஒவ்வொரு சந்ததியிலும் வாழ்ந்த பரிசுத்தவான்கள் தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றி, அவர்களுடைய காலம் நிறைவேறின போது, விசுவாசத்தோடு இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். எடுத்துக்காட்டாக, நோவா, ஆபிரகாம் போன் றவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக நடந்து கொண்டார்கள். மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான். எலியா, ஏரேமியாக போன்ற தீர்க்கதரிசிகள் தங்கள் காலத்திலே பல பாடுகளை சகித்தார்கள். இப்படியாக தேவ அழைப்பை பெற்ற தேவமனிதர்கள் யாவரும் தங்கள் பணியை நிறைவேற்றினார்கள். தேவனானவர் தானியேலை நோக்கி: நீயோ வென்றால் முடிவுவருமட்டும் போயிரு. நீ இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய் என்றார். பிதாவாகிய தேவன் முன்குறித்த காலத்திலே மீட்பராகிய இயேசு பூவுலகிற்கு வந்தார். அவருடைய வாக்குத்தத்தம் நிறைவேறியது. மீட்பராகிய இயேசு தம்முடைய திருப்பணியை நிறைவேற்றி பரலோகத்திற்கு எழுந்தருளினார். “நான் மறுபடியும் வந்து உங்களை என்னோடு சேர்த்துக் கொள்வேன்” என்று வாக்குரைத்துச் சென்றார். சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக, அவருடைய பரிசுத்தவான்கள், தங்கள் திருப்பணியை நிறைவேற்றி, அவருடைய இரண்டாம் வருகையை எதிர் பார்த்து, விசுவாசத்தோடு, இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். நாமும் அவ்வண்ணமாகவே நமக்கு கொடுக்கப்பட்ட திருப்பணியை நிறைவேற்றி முடிக்க வேண்டும். கர்த்தருக்கு சித்தமானால் நன்மை செய்து பாடநுபவிக்க நேர்ந்தாலும், சலிப்படையாமல், சோர்ந்து போகாமல், நம்முடைய நாட்களில் தேவ சித்தத்தை நிறைவேற்றி முடிக்க வேண்டும். கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் பொறுமை யோடு முன் செல்ல வேண்டும். கர்த்தர் கூறிய வாக்கு நிறைவேறும்! அவர் மறுபடியும் வந்து நம்மை தம்மோடு சேர்த்துக் கொள்வார். எனவே விசுவாசத்திலே உறுதியாய் தரித்திருங்கள்.

**ரோமர் 2:7**

**சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.**

**ஜெபம்:** என் நாட்களை அறிந்த தேவனே, காலங்கள் கடந்து சென்றாலும் நான் சோர்ந்து இளைப்படையாமல், நீர் எனக்கு தந்த பொறுப்பை முழு மனதோடு நிறைவேற்றி முடிக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பழைய சுபாவங்கள் மாறட்டும்

ஒரு பண்ணையின் சொந்தக்காரன் பன்றியின் கூட்டத்திலிருந்து ஒரு பன்றியை பிரித்தெடுத்து, அதை சுத்தப்படுத்தி, அது உயிர் வாழ்வதற்கு வேண்டியவைகள் யாவற்றையும் கொடுத்து, சுத்தமான இடத்திலே அதை வைத்து பராமரித்து வந்தான். அவன் எவ்வளவு முயற்சி செய்தாலும், அந்த பன்றி சோர்ந்திருப்பதைக் கண்டு கொண்டான். அதனால், அவன் அதை அதன்பாட்டிற்கு திறந்து விட்டபோது, அது மற்றய பன்றிகள் இருக்கும் சேற்றிற்கு மிக விரைவாக சென்று அங்கே புரண்டு கொண்டது. அந்தப் பன்றியின் சூழ்நிலைகள் யாவற்றையும் நல்லதாக மாற்றிக் கொடுத்த போதும், அந்த பன்றியின் இயற்கை சுபாவம் மாறாததினாலே, பண்ணை சொந்தக்காரனின் எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை. நித்திய ஜீவனுக்கென்று அழைப்பைப் பெற்ற நாம், பரிசுத்த வாழ்வு வாழும்படி வேறு பிரிக்கப்பட்டிருக்கின்றோம். நாம் சமாதானமான வாழ்வு வாழ்வதற்குரிய யாவற்றையும் தேவனாகிய கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கின்றார். நம்மை சகல சத்தியத்திலும் நடத்தும் ஆவியானவர் நம்மோடிருக்கின்றார். அப்படி யாவும் கொடுக்கப்பட்டிருந்தும், சில விசுவாசிகளின் வாழ்விலே சமாதானம் இல்லை. இரட்சண்யத்தின் சந்தோஷம் இல்லை. அப்படியான சூழ்நிலையிலே, அவர்கள் தங்கள் இருதயத்தின் வாஞ்சைகளை ஆராய்தறிந்து கொள்ள வேண்டும். பரிசுத்தத்திற்குரிய காரியங்கள் யாவும் கொடுக்கப்பட்டிருந்தும், இருதயமானது இன்னொரு காரியத்தை வாஞ்சிக்கின்றதென்றால், ஒருவேளை அவை மாம்சத்தின் இச்சையாக இருக்கும். இது ஒரு பரிதாபமான நிலைமை. பிரியமானவர்களே, நம்முடைய பழைய சுபாவங்கள் யாவும் மாற வேண்டும். அதில் ஏதாகிலும் ஒன்று நம்மிடத்தில் இருக்கும் என்றால், அந்த சுபாவத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற வாஞ்சையும் அங்கே உண்டாயிருக்கும் அல்லது சில சூழ்நிலைகளிலே உண்டாகிவிடும். ஏனவே மாம்சத்தின் இச்சைகளை உண்டு பண்ணும் பழைய மனுஷனுக்குரிய சுபாவங்களை உங்களைவிட்டு முற்றாக அகற்றிவிடு ங்கள். தெய்வீக சுபாவங்களை வாஞ்சித்து தேடுங்கள். உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.

**எபேசியர் 4:22**

**அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு,**

**ஜெபம்**: புதிய வாழ்வை எனக்கு தந்த தேவனே, பழைய வாழ்விற்குரிய மோசம் போக்கும் இச்சைகளை நான் மறுபடியும் பற்றிக் கொள்ளாதபடிக்கு என்னை நீர் பெலப்படுத்தி உம்முடைய வழியில் நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆகாத சுபாவங்கள் மாறும்

"அவன் ஒரு நல்ல மனுஷன் ஆனால் அவனுடைய வாய் சரியில்லை" என்று மனிதர்கள் சிலரைக் குறித்து கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். தேவ பிள்ளைகள் மத்தியிலும் இவ்வண்ணமாக சில விசுவாசிகள் இருப்பதைக் காணாலாம். நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறு கிறோம் ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தி னாலே அடக்கிக் கொள்ளக்கூடிய வனுமாயிருக்கிறான். பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும் படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்து கிறோம். கப்பல்களையும் பாருங் கள், அவைகள் மகா பெரியவைக ளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவா னதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! நாவினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம் தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது என்று பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம் (யாக்கோபு 3). நாம் பற்பல காரியங்களை தேவனிடத்திலே கேட்டு பெற்றுக் கொள்கின் றோம். ஏறத்தாழ அவைகளில் யாவும் இந்த உலக வாழ்க்கைக்கும், சரீரத்திற்கும் உரியதாகவே இருக்கின்றது. சில வேளைகளிலே அவை களை பெற்றுக் கொள்ளும்படிக்கு விசுவாசிகள் உபவாசித்து ஜெபிக்கி ன்றார்கள். தேவ சமுகத்திலே பொருத்தனைகளை செய்து, வாஞ்சித்த காரியங்கள் வாய்க்கும் போது, பொருத்தனைகளை குறித்து காலத்தில் நிறைவேற்றி, பெருந்தொகையாக காணிக்கைகளையும் கொடுக்கின்றா ர்கள். அழிந்து போகும் இந்த உலகத்தின் காரியங்களுக்காக அப்படி செய்தால், அழியாத பரலோக வாழ்விற்காக நாம் எவ்வளவு அதிகமாக வாஞ்சிக்க வேண்டும். நாவடக்கத்திற்காக ஜெபியுங்கள், கோப சுபா ங்கள் நீங்க வேண்டுதல் செய்யுங்கள். மறைவான பாவங்கள் நீங்க விண்ணப்பம் பண்ணுங்கள். ஊக்கத்தோடு கேளுங்கள். பரம பிதா நிச்சயமாக பதிலளிப்பார்.

**மத்தேயு 7:11**

**பரலோகத்திலிருக்கிற உங் கள் பிதா தம்மிடத்தில்வேண் டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?**

**ஜெபம்**: பரலோக தகப்பனே, ஆண்டாண்டு காலமாக என்னுள் மறைந் திருக்கும் ஆகாத சுபாவங்களை நீர் அறிந்திருக்கின்றீர். அவை யாவற் றையும் நான் மேற்கொள்ளும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பாவத்தினால் உண்டாகும் பெலவீனம்

ஒரு சிறிய வாகன விபத்தொன்றிலே அகப்பட்டுக் கொண்ட வாலிபனானவனின் கையொன்றில் எலும்பு முறிவடைந்து. அந்த கையெலும்பின் முறிவு குணமடையும் வரை அந்த கையை ஒரு நிலையிலே வைத்திருக்கும்படிக்கு, வைத்தியர் அந்தக் கையை கட்டுத்துணியினால் வார்ப்பு போட்டிருந்தார். அவன் வழமையாக தான் செய்யும் வேலைகளை செய்ய முடியாதிருந்ததால், அவனுடைய தாயானவள் அவனுக்கு அன்பு காட்டி, அவனை நன்றாக கவனித்தாள். அந்தக் கையானது முற்றாக குணமடையும்வரை, அவனுடைய தகப்பனானவர் அவனுக்கு ஆதரவாக இருந்து அவனுடைய வேலைகளிலே மிகவும் உதவியாக இருந்து வந்தார். இப்படியாகவே தேவ ஆவியானவர் தாமே நம்முடைய பெலவீன வேளைகளிலே நமக்கு பெலனாக வருகின்றார். நம்முடைய குறைவுகளிலே நிறைவாக வருகின்றார். இது தேவனுடைய கிருபை. ஆனால், அந்த வாலிபனானவன் களவு செய்ய ஆரம்பித்தான் என்று அவனுடைய பெற்றோர் அறிந்த போது, அவனுக்கு ஆலோசனைகளை கூறி, கடிந்து கொண்டு, அவனை சிட்சித்தார்கள். அவன் களவு செய்து கொண்டிருக்கட்டும், அது அவனுடைய பெலவீனம், அவனுக்கு நாம் உதவி செய்ய வேண்டும் என்று பெற்றோர் கூறுவதில்லை. எனவே, நாமும் பாவத்திலே வாழ்ந்து கொண்டு, அது என் பெலவீனம், அதை நான் விட்டுவிடக்கூடாது. ஆவியானவர் எனக்கு பெலனாக வருவார் என்று பாவத்திலே வாழ்ந்துவிட முடியாது. தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். ஒருவனும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு தேவனானவர் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். அந்த நீடிய பொறுமையும் தேவ கிருபையே. ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பிரியமானவர்களே, நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநி யாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு தேவனானவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். எனவே, பாவத்தினால் உண்டாகும் பெலவீனத்தில் நாம் மூழ்கி மாண்டு போகாமல். தேவனிடத்திலே அறி க்கை செய்து விட்டுவிடுவோமாக.

**ரோமர் 6:1**

**ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே.**

**ஜெபம்:** இரக்கமும் மனஉருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய கிருபையை நான் அசட்டை பண்ணாமல், பரிசுத்தமாய் வாழ எனக்கு உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மறைவான பாவங்கள்

ஒரு சனசமுக நிலையலத்தில் அங்கத்தவராக இருந்த மனிதனானவன், கிராமத்திலே நடந்த களவுவொன்றிலே பிடிபட்டதால், அவனுடைய குற்றத்தை சனசமுக நிலையத்திலிருந்த மற்றய அங்கத்தவர்களுக்கும், கிராமத்தின் மூப்பர்களுக்கும் அறிவித்தார்கள். இதினிமித்தம் அந்த சனசமுக நிலையத்தின் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டான். பலர் முன்னிலையிலே அவன் அவமானமடைந்தான். ஆனால், சனசமுகநிலையதின் நிர்வாகத்திலே இருந்த ஐசுவரியமுள்ள முக்கிய உறுப்பினனொருவன், தன் உழைப்பிலே, சட்டப்படி அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்ட வரியை செலுத்தாமல் இருப்பதற்கு பல உபாயங்களை செய்து வந் தான். அதை சிலர் அறிந்திருந்தும், அதை பராமுகமாகவிட்டுவிட்டார்கள். ஒரு சிறிய களவை செய்த கிராமத்து குடியானவன், வெகுவாய் தண்டிக்கப்பட்டான். ஆனால், அரசாங்கத்திற்கு விரோதமாக களவு செய்து கொண்டிருப்பவன், கிராமத்திலே சிறப்புக் குடிமகனாக வாழ்ந்து வந்தான். இவன் மனிதர்களுக்கு இவைகளை மறைத்து வைக்கலாம். ஆனால் இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனுக்கு மறைபொருளாக காரியம் ஒன்றுமில்லை. ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த போது, இப்படிப்பட்ட சிறப்பு குடிமக்களாகிய பரிசேயர், வேதபாரகரை கண்டார். “மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள் உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்.” என்று அவர்களின் உண்மை நிலைமையை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். பிரியமானவர்களே, இன்றும் விசுவாசிகள் மத்தியிலே சில குற்றங்கள் யாவருக்கும் வெளியரங்கமாக இருக்கின்றது. ஆனால், மனதிலே மறைந்திருக்கும் பெரிய குற்றங்களும் உண்டு. மறைவான பாவங்களில் வாழ்வோர் தங்களை மற்றவர்களுக்கு நீதிமான்களாக காட்டிக் கொள்ளலாம். ஆனால் தேவன் முன்னிலையில் எவற்றையெல்லாம் யார் மறைத்து வைக்க முடியும். எனவே, மறைவான குற்றங்கள் இருக்குமாயின் அவைகளை அறிக்கை பண்ணி விட்டுவிடுவது நல்லது. கர்த்தரின் நாளிலே கறையற்றவர் களாக அவர் முன்பாக காணப்படுவோமாக.

**ரோமர் 8:27**

**இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.**

**ஜெபம்:** என் சிந்தையை முன்னறிந்தவரே, மறைவான பாவங்களை பாராமுகமாக விட்டுவிட்டு, நான் என் வாழ்க்கையை பாவத்திலே வாழாதபடிக்கு உமக்கு பயப்படுகின்ற பயம் என்னுள் எப்போதும் இருப்பதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுக்கு ஏற்ற இருதயம்

ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தன் நண்பர்களோடு சேர்ந்து குடித்து, வெறித்து, உல்லா சமான வாழ்க்கை வாழ்ந்து வந்தான். அது ஊராரின் கண்களுக்கு வெளியரங்கமாக இருந்தது. மூத்தவனோ, குறிப்பிட்ட சில நண்பர்க ளோடு சேர்ந்து, தூரத்திலுள்ள ஊருக்கு பயணம் சென்று, பலவி தமாக தகாத இச்சைகளை நிறை வேற்றி, ஊருக்கு திரும்பி, ஊரார் முன்னிலையில் அமைதலான வாழ்க்கை வாழ்ந்து வந்தான். தங் கள் இரண்டு குமாரர்களின் நிலை மையை பெற்றோர் நன்றாக அறி ந்திருந்தார்கள். ஆனால், அவர் கள் இளைய குமாரனின் நடக்கையை குறித்தே அதிக கரிசனையுள்ள வர்களாக இருந்தார்கள். ஏன்? மூத்தவனின் குற்றங்களை ஊரார் அறிந்திருக்கவில்லை, அறிந்து கொள்வதற்கு சாத்தியமும் இல்லை. ஆனால், இளையவனின் குறைகளை ஊரார் அறிந்திருந்ததால், தங்கள் குடும்பத்திற்கு அவமானம் என்று எண்ணினார்கள். அதாவது, தங்கள் குமாரர்கள் இரண்டு பேரும் பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற வாஞ்சை அவர்கள் மனதில் இல்லை. ஆனால், தங்கள் பிள்ளை களின் குற்றங்கள் தங்கள் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சபை யோர் அறியக்கூடாது என்பதே அவர்களுடைய முதன்மையான பிரச்ச னையாக இருந்தது. தாவீது என்னும் ராஜா, தேவனுக்கு ஏற்ற இருதய முடையவன் என்ற சாட்சியை தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டான். தாவீது, தன் இளம் பிரயாத்திலிருந்து பெரும் குற்றங்களிலே அகப்பட்டி ருந்தான். தன் குற்றங்களை உணர்ந்த போது, அவன் மனதிலே முதன் மையாக இருந்த காரியம் என்ன? தேவனே, உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும் என்று வேண்டுதல் செய்தான். மற்றவர்க ளுக்கு தன் குற்றத்தை மறைப்பது அவனுடைய நோக்கமாக இருக்க வில்லை. அப்படியானால் நாம் நம் பாவங்களை ஊர் உலகிற்கு அறிவி க்க வேண்டும் என்பது பொருளல்ல. மாறாக, ஒருவேளை நம்முடைய குறை களை ஊர் உலகம் அறிந்திருந்தாலும், அவைகளை மூடி மறைப்பதில் நாட்களை விரயப்படுத்தாமல், தேவனுக்கு முன்பாக நாம் உண்மையு ள்ளவர்களாக இருந்து, அவரோடு ஒப்புரவாகுவதையே முதன்மையாக கொண்டிருக்க வேண்டும்.

**சங்கீதம் 51:10**

**தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலை வரமான ஆவியை என் உள்ள த்திலே புதுப்பியும்.**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்விற்கு வேறு பிரித்த தேவனே, என்னை குற்றவா ளிகயென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளியென்று நான் தீர்க்காதபடிக்கும் நீர் எனக்கு பிரகாசமுள்ள மனக் கண்களைத் தந்த ருள்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உலகத்தை அனுபவித்தால் என்ன?

சில குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து, அநேக நாட்களாக குறிப்பிட்ட ஊரொன்றை நோக்கிப் பிரயாணப்பட்டு கொண்டிருந்தார்கள். பரவசத்தோடு பிரயாணத்தை ஆரம்பித்தார்கள். போகும் வழியில் எல்லா சூழ்நிலைகளும் அவர்களுக்கு சாதகமானதாக இருக்கவில்லை. சில நாட்களிலே, பகலிலே வெயிலின் உஷ்ணமும், இரவிலே குளிரும் அதிகமாக இருந்தது. சில இடங்களிலே கண்ணை கவரும் காட்சிகளை கண்டார்கள். செழுமையாக தோன்றும் இடங்களை கண்டபோது, சிலர் அந்த இடத்திலேயே தரித்து நின்றுவிட்டார்கள். உற்சாகத்தோடு ஆரம்பித்த பிரயாணம், இடைவெளிலே மந்த நிலையை அடைந்தது. எத்தனை நாட்கள் நாங்கள் நடோடிகளைப் போல, இப்படியாக பிரயாணம் செய்ய வேண்டும் என்று பிள்ளைகளில் சிலர் சலித்துக் கொண்டார்கள். ஆனாலும், பல இன்னல்கள், சவால்கள் மத்தியிலும், நாங்கள் குறித்த ஊருக்கு போவோம் என்ற உறுதியுடன் ஒரு சிலர் முன்னேறிச் சென்றார்கள். ஆம், பிரியமானவர்களே, நித்திய ஜீவனை பற்றிக்கொள்ளும்படி தேவனின் பரம அழைப்பை நாங்கள் பெற்றிருக்கின்றோம். இந்த பூமியிலே யாத்திரிகளாக கடந்து சென்று கொண்டிருக்கின்றோம். பல நெருக்கங்கள், இன்னல்கள், கஷ்டங்கள், உபத்திரவங்கள் மத்தியிலும், இந்த உலகம் தரும் தற்காலிகமான சந்தோஷத்தை நாடாமல், முடிவில்லாத வாழ்வை நோக்கி பயணம் செய்கின்றோம். எத்தனை நாட்கள் இப்படியாக நாம் யாத்திரை செய்ய வேண்டும்? நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேடனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன் (பிலிப்பியர் 3:12) என்று தேவ ஊழியராகிய பவுல் கூறியிருக்கின்றார். பாரங்கள் அதிகமாக இருக்கின்தே எனவே இடையில் நின்றால் என்ன? இந்த உலகத்தை சற்று அனுபவித்தால் என்ன? நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது (2 கொரி 4:16-17). எனவே நாம் சோர்ந்து போகாமல் பொறுமையோடு ஓடக்கடவோம்.

**எபிரெயர் 13:14**

**நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, அழிந்து போகின்ற இந்த மண்ணோடு என் ஆத்துமா ஒட்டிக் கொள்ளாதபடிக்கு, நான் அடையவிருக்கும் நித்திய கனமகிமையின் மேன்மையை உணரும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பலன் கொடுக்கும் மரங்கள்

அப்பா, எங்களிடத்தில் உதவியை பெற்றவர்களைப் பாருங்கள், எவ்வளவு வசதியாகவும், உல்லாசமாகவும், இடாம்பீகரமான வீடு வாசல்களோடு செழித்திருக்கின்றார்கள். ஆனால், தானதர்மங்கள் என்று வாரிஇறைத்த நீங்கள் அப்படியே இந்த வீட்டிலே இருக்கின்றீர்களே என்று ஒரு மகனானவன், தன் தகப்பனானவரிடம் கூறினான். அதற்கு தகப்பனானவர் மறுமொழியாக: அப்படியல்ல மகனே, நான் ஒரு ஆசிரியர். இந்த ஊரிலே என்னிடம் கல்வி கற்ற மாணவர்கள் இன்று பிரபல்யமான வத்தியர்களாகவும், பெயர்பெற்ற வைக்கீல்களாவும், பல தொழித்துறைகளிலே இருக்கின்றார்கள். இந்த ஊரைக் குறித்தும், ஊரின் கஷ்டத்தின் மத்தியில் வாழும் மக்களை குறித்தும் அவர்கள் அறிந்திருக்கின்றார்கள். ஏனெனில், அவர்களில் பலர் அவ்வண்ணமாகவே இருந்தார்கள். நான் எனக்கு கொடுக்கப்பட்ட அழைப்பை கருத்தோடு செய்து வருகின்றேன். உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும்,மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. மற்றவர்கள் தங்கள் அழைப்பை மறந்து போய்விடுவதினால், நாங்களும் அப்படியிருக்கலாகாது. மாங்கன்றுகளை நடுகின்றவன், அது வளர்ந்து சுவையான அதிக கனிகளை கொடுக்கும் என்ற எதிர்பார்ப்போடே, அந்த கன்றுகளை நட்டு, நீர்பாய்ச்சி, பசளை போட்டு பராமரிக்கின்றான். சில மரங்கள் வளர்ந்து புளிப்பான பழங்களை கொடுப்பதால், அவன் புதிய மாங்கன்றுகளை நடுவதை நிறுத்தி விடுவதில்லை. நல்ல நிலத்தில் விழுந்தவைகள் வளர்ந்து அது அதிக பலன் கொடுப்பது போல, நல்ல கனிகளை கொடுக்கும் மரங்களும் உண்டு. எனவே, மற்றவர்கள் சுயநலத்துடன் வாழ்ந்தால் அவர்கள் அதற்குரிய பலனை அடைவார்கள். பலனற்ற மரங்களை கண்டு சோர்ந்து போகாமல், நாங்கள் எப்போதும் பலன் கொடுக்கின்ற மரங்களாக இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார். பிரியமானவர்களே, மற்றவர்களுடைய நன்றியற்ற வாழ்க்கையைக் கண்டு சோர்ந்து போய்விடாதிருங்கள். நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள், சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபே 2:10). தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாகியிருக்கின்றார். எனவே அவருடைய சித்தம் நம்மில் நிறைவேற இடங் கொடுப்போமாக.

**கலாத்தியர் 6:9**

**நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.**

**ஜெபம்:** நன்மைசெய்வதிலும், தானதர்மம்பண்ணுவதிலும் பிரியமாயிருக்கின்ற தேவனே, நான் நன்மை செய்வதில் ஒரு போதும் சோர்ந்து போகாதிருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| செவ்வாய் \| ஆகஸ்ட் 29 | 📖 மாலை வாசகம் – யோவான் 14:6 |
|---|---|

# இயேசு இல்லாமல் வாழ்வு இல்லை

என்னிடத்திலே கல்வி தகமைகள் உண்டு. என் பெயரில் சொத்துக்கள் உண்டு. சட்டப்படி தேசத்திலே பாதுகாப்பு உண்டு என்று தங்கள் சொந்த வீட்டைவிட்டு தூரமாய் போய், தங்கள் இஷ்டப்படி வாழும் மதியீனமான பிள்ளைகளைப் போல நீங்கள் ஒருபோதும் ஆண்டவராகிய இயேசுவை விட்டு தூரமாய் சென்றுவிடாதிருங்கள். சில வேளைகளிலே, விசுவாசிகளின் வாழ்வில் குற்றஉணர்வுகள் தலைதூக்கி விடுகின்றது. இப்படி எத்தனை முறை நான் தவறிப்போகப் போகின்றேன்? என்ற கேள்வியை தங்களுக்கு தாங்களே கேட்டு, நான் திருந்திய பின்பு ஆண்டவர் இயேசு விடம் வருவேன் என்று கூறி முதலாவதாக சபை கூடிவருதலை விட்டு விடுகின்றார்கள். பின்பு படிப்படியாக வேதத்தை தியானிப்பதையும், ஜெபிப்பதையும் நிறுத்தி விடுகின்றார்கள். மனிதர்கள், மனந்திரும்பி அல்லது மனந்திருந்தி வாழ தேவையான ஜீவ வழியை விட்டு தங்களை தாங்களே இந்த உலக போக்கிற்கு அடிமைகளாக ஒப்படை த்து விடுகின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, ஆண்டவர் இயேசு இல்லாத வாழ்வு பலைவனத்தை போன்ற வறண்ட வாழ்வு. ஒரு சமயம், ஆண்டவாகிய இயேசுதாமே, தம்மை பின்பற்றியவர்களின் உண்மையான நிலைமையை அவர்களுக்கு வெளிப்படுத்தி, நித்திய வாழ் வை அடையும் வழியைப் பற்றி அவர்களுக்கு போதித்த போது, அநேக ஜனங்கள் ஆண்டவர் இயேசுவை விட்டு பின்வாங்கி சென்றுவிட்டார்கள். அந்த வேளையிலே, ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: நீங்களும் போய்விட மனதாய் இருக்கின்றீர்களா என்று கேட்டார். அதற்கு சீமோன் பேதுரு என்னும் சீஷன் மறுமொழியாக: நாங்கள் யாரிடத்திலே போவோம் ஆண்டவரே, நித்திய ஜீவனைக் கொடுக்கும் வார்த்தைகள் உம்மிடம் தான் உண்டு என்று அறிக்கையிட்டான். ஆம், நம் ஆண்டவராகிய இயேசுவே பரலோத்தின் வழியாக இருக்கின்றார். அவரையன்றி ஒருவரும் பிதாவினித்தில் சேர முடியாது. எனவே, வாழ்வில் ஏற்படும் பின்னடைவுகளினாலோ, அல்லது உங்கள் பொருளாதார வளர்ச்சியினாலோ, உணர்வற்றவர்களாய் ஆண்டவர் இயேசுவைவிட்டு பின்வாங்கிப் போய்விடாதிருங்கள். எக்காலத்திலும், எல்லா சூழ்நிலைகளிலும் அவரையே அண்டிக் கொள்ளுங்கள். அவர் நமக்காக தம் ஜீவனையே கொடுத்தவர். ஒருபோதும் நம்மை கைவிடமாட்டார்.

**யோவான் 15:6**

ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்;

**ஜெபம்:** உம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை நமக்காக கொடுத்த தேவனே, இரட்கர் இயேசு இல்லாமல் வாழ்வு இல்லை என்பதை நான் எப்போதும் உணர்ந்தவனாக அவரிலே நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சுமை அதிகமாயிருக்கின்றதே!

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த முதியவரொருவர், நதியின் அக்கரைக்கு போகும்படிக்கு, தன் இரண்டு தோள்களிலும், பொருட்கள் நிறைந்த பையை போட்டுக் கொண்டு, யாவராவது தன்னை படவிலே கொண்டு சென்று விடுவார்களா என்று காத்திருந்தார். அந்த முதிவரைக் கண்ட படகோட்டியொருவன், அவர்மேல் இரக்கங் கொண்டு, அவரை நோக்கி: ஐயா, என்னுடைய படகிலே ஏறிக் கொள்ளுங்கள், நான் உங்களை அக்கரைக்கு கொண்டு செல்கின் றேன் என்று கூப்பிட்டான். முதியவ ரும், மகிழ்ச்சியோடு படகிலே ஏறி, பொருட்கள் நிறைந்த பைகளை தோளில் போட்டுக் கொண்டு நின் றார். ஒரு பக்கமாக நின்று கொண் டிருந்தார். அதைக்கண்ட படகோ ட்டி, அவரை நோக்கி, ஐயா, பார த்தை தூக்கியபடி நிற்கின்றீர்களே, சற்று இறக்கி வைத்து, இளைப்பாறு ங்கள் என்று கூறினான். ஆனால், முதியவரோ, பாரங்களை இறக்க மன தில்லாமல், தன் பாரத்தை தூக்கியபடியே படகில் நின்று கொண்டிரு ந்தார். பிரியமானவர்களே, இன்று சமாதானமான வாழ் விற்கு அழை ப்பை பெற்றவர்கள் பூரண சமாதானத்தை அனுபவிக்க முடியாமல் இரு க்கின்றார்கள்? ஆரம்பத்திலே உற்சாகமாக கிறிஸ்துவுக்குள் வாழ்ந்த வர்கள், ஏன் பாதி வழியிலே சோர்ந்து போய்விடுகின்றார்கள்? தங்கள் வாழ்விலே பல நற்கிரியைகளை செய்து வந்தாலும், ஏன் நன்மையை உணரமுடியாமல் இருக்கின்றது? வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர் களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு அவரிடத்தில் வந்த பின்பும், சிலர் கொண்டு வந்த சுமைகளை இறக்கி வைக்காமல், தூக்கிச் சுமக்கின்றார்கள். வேறு சிலர், ஆண்டவர் இயேசுவிடம் வந்தபி ன்பும், இந்த உலகத்தின் மேலுள்ள ஆசையினால் இழுப்புண்டு, அநாவ சியமான சுமைக்ளை மறுபடியும் தூக்கிவிடுகின்றார்கள். நாளைய தின த்தைக் குறித்து கவலை படாதிருங்கள் என்று ஆண்டவர் இயேசு கூறி யிருக்கின்றார். கவலைகளும், பயங்களும் சூழ்ந்து கொள்ளும்போது, அவைகளை இயேசுவின் பாதத்திலே இறக்கி வைத்து விடுங்கள். புதிய சுமைகளை தூக்கிவிடாமல், வேத வார்த்தைகளுக்கு கீழ்படிந்து சமாதானமான விசுவாச வாழ்வை வாழுங்கள்.

**மத்தேயு 11:28**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கி றவர்களே! நீங்கள் எல்லா ரும் என்னிடத்தில் வாருங் கள்; நான் உங்களுக்கு இளை ப்பாறுதல் தருவேன்.**

**ஜெபம்**: சமாதானமான வாழ்விற்கு என்னை அழைத்து தேவனே, சுமை கள் யாவையும் உம்முடைய பாதத்திலே இறக்கி வைத்து, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே நான் வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காலமும், உலகமும், மனிதர்களும்

காலங்கள் மாறிப் போயிற்று. உலகம் மாறிப் போய்க் கொண்டே இருக்கின்றது. நன்மைகளை பெற்ற மனிதர்களும் சீக்கிரமாய் மாறி போய்விடுகின்றார்கள் என்று ஒரு விசுவாசியானவன் தன் மேய்ப்பரோடு பேசிக் கொண்டிருந்தான். அவன் குரலின் தொனியிலே அதிருப்தியும் சலிப்பும் கலந்திருப்பதை மேய்ப்பரானவர் அவதானித்துக் கொண்டார். இதினிமித்தம் அந்த மேய்ப்பரான வர், அந்த விசுவாசியானவனை தனி யாக சந்தித்து பேசினார். மகனே, நீ கடந்த கிழமை பேசிய காரி யங்களிலே உண்மை உண்டு. காலத்தோடு, உலகமும் அதன் போக்கும் மாறிக் கொண்டு தான் போகின்றது. மனிதர்களிலும் பலர் உலகத்திற்கு ஒத்த வேஷத்தை தரித்தவர்களாய் தங்களை காலத்திற்கு ஏற்றபடி மாற்றிக் கொள்கின்றார்கள். இது ஒரு புதிதான இரகசியம் அல்ல. ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த முன்னோடிகளான பரிசுத்தவான்கள், தங்கள் நாட்களிலே, இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்காமல், தங்கள் வாழ்வை காத்துக் கொண்டார்கள். எப்படி அதை செய்தார்கள்? தங்களை சூழ உள்ள மனிதர்கள் உலகத்திற்கு ஒத்தவர்களாய் மாறிக் கொண்டிருக்கின்ற வேளையிலே, தங்களுக்குள் இருக்கும் உள்ளான மனிதன் நாளுக்கு நாள் இயேசுவின் சாயலடையும் படி அவர்கள் இடங் கொடுத்தார்கள். அதனால் அவர்கள் இந்த மாறும் உலகத்தையும், அதன் போக்கில் வாழும் மனிதர்களையும் கண்டு அதி ருப் தியடையாமலும், சலிப்படையாமலும், இந்த உலகத்திலே வாழு ம்வரை ஆண்டவர் இயேசுவிலிருந்த சிந்தையோடு வாழ்ந்தார்கள் என்று அறிவுரை கூறினார். ஆம் பிரியமானவர்களே, கோணலும் மாறு பாடு மான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவ னுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு நாம் எல்லாவற் றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்ய வேண்டும். நாம் நலன்விரும்பிகளாக அல்ல முதன்மையான விசுவாசிகளாக வாழ வேண்டும். நலன்விரும்பிகள் மற்றவர்களுடைய வாழ்க்கை மாற வேண் டும் என்கின்ற எண்ணமுடையவர்களாக இருக்கின்றார்கள். அது நல்லது. ஆனால் அதைவிட என்னுடைய உள்ளான மனிதன் நாளுக்கு நாள் கிறி ஸ்துவின் சாயலிலே வளர வேண்டும் என்பது விசுவாசிகளுக்கு மிகவும் இன்றியமையாதது. எனவே, நம்முடைய ஆண்டவர் இயேசுவைப் போல, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யும்படிக்கு அவருடைய சாயலிலே வளர்ந்து பெருகுவோமாக.

> **ரோமர் 12:2**
>
> உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

**ஜெபம்**: நித்திய வாழ்விற்கென்று என்னை வேறு பிரித்த தேவனே, உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவின் சாயலிலே நான் அனுதினமும் வளர்ந்து பெருகும்படிக்கு உணர்வுள்ள வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.